# யாழ்நாதம்

இதழ் 15

௨௦௦௯




வெளியீடு

'யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச மகளிர் தினம் 2008.03.09 அன்று திருமதி சரஸ்வதி ஜெயராஜா அவர்களைக் கௌரவித்த நிகழ்வின் நிழல்கள் (குறிப்பு – பக்கங்கள் 5–8)









யாழ் நாதம் இதழ் 14 வெளியீடு (குறிப்பு – பக்கம் 7)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு:- 'யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் – கொழும்பு'

# யாழ் நாதம்

இதழ் 15 2009

உள்ளே: . . . . . .


| | |
|---|---|
| கல்லூரிக் கீதம். | 02 |
| கடமை. | 03 |
| சேவை மனப்பாங்கும் அர்ப்பணிப்பும். | 04 |
| சர்வதேச மகளிர் தின நிகழ்வு. | 05 |
| திருமதி சிவகாமி அம்பலவாணரின் தலைமை உரை. | 09 |
| உப தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன் உரை. | 12 |
| உப தலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளை உரை. | 14 |
| திருமதி சரஸ்வதி ஜெயராஜா. | 16 |
| திருமதி ஷர்மினி ஸ்ரீபிருந்திரன் உரை. | 18 |
| ஆளுமைமிக்கவர். | 20 |
| எனது பார்வையில். | 21 |
| திருமதி சரஸ்வதி ஜெயராஜாவின் ஏற்புரை. | 24 |
| பெண்மை வாழ்க. | 27 |
| பெண்கள் விடுதலைக் கும்மி. | 28 |
| கோவிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம். | 29 |
| ஸ்ரீ சைலத்தின் பெருமை. | 30 |
| செல்வத்துள் சிறந்த செல்வம். | 32 |
| நல்வாழ்வுக்கான சில நற்சிந்தனைகள். | 39 |
| பாதகங்களை விளைவிக்கும் நொறுக்குத் தீனி. | 44 |
| மதியபோசன விருந்து. | 46 |
| ஒன்று கூடல் (கனடா). | 47 |
| முதலில் நம் நாட்டில் சமாதான நடவடிக்கைகளை கூர்மைப்படுத்த வேண்டும். | 48 |
| மனிதம் சிதைய விடலாமா?. | 50 |
| ஸ்ரீதேவி பாரில் அவதரித்தாளோ?. | 51 |
| Hindu festivals, Meanings and Significance. | 55 |
| பதினைந்தாம் ஆண்டறிக்கை. | 60 |


"நான் இங்கு வசிக்கிறேன். இவ்விடம் அழகாக இருக்கும்"
"It ought to be beautiful, I live here"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரிக் கீதம்

திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி - எங்கள்
பெருவரு மிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடுங் கல்லூரி - உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி - உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ

இந்து மதப் புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடுங் கல்லூரி - இயல்
சிந்தை வளம்பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி - வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடுங் கல்லூரி - உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த்தொடு சூடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி - ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி - இந்து
நங்கையர் வாழ்வின் லட்சிய மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி - உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏத்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி - என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி - நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி - உனைத்
தலைமுறையாகத் தொழுதுளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமை

பகவக் கீதையின் பதினெட்டு அத்தியாயத்தின் சாரம்
'கடமையைச் செய்'
'பலனை எதிர்பாரதே'
'என்னிடம் சரண் அடை' என்பதே ஆகும்.

அதற்கமைய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பலனை எண்ணாது செய்ய வேண்டியதைச் செய்யும் நெறி நின்று தான் செய்ய வேண்டிய கடமைகளை இறுதி மூச்சு வரை செய்து வந்த பெருமாட்டி ஆவார். உண்மையிலேயே சமய, சமூகப் பணிகளே இவரையொரு தெய்வீக நிலைக்கு உயர்த்தியது என்பதை எவராலும் மறக்கமுடியாது. தெய்வத் திருமகளாகிய அவருக்கு இவ்விதழை சமர்ப்பணம் செய்கின்றோம்.

அதே போல் தமது கடமைகளை செவ்வனே செய்து வரும் சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணர் ஆவார். அவர் தமது மகளுடன் வசிப்பதற்காக நியூசிலாந்துக்கு செல்ல இருக்கின்றார். ஆதலால் அவர்களை இன்று பாராட்டி விழா எடுப்பதையிட்டு எமது சங்கம் பெருமைப்படுகின்றது.

தமது ஆக்கங்களை அளித்து உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆக்கங்கள் எல்லாம் ஒரு சிலரிடம் இருந்துதான் வருகின்றன. மற்றவர்களிடம் இருந்தும் ஆக்கங்கள் வருவதை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

யாழ்நாதம் இதழ்களை அழகுற அமைத்து ஆண்டுதோறும் வெளியிட உதவிவரும் யூனி ஆட்ஸ் நிறுவனத்திற்கும் அதன் உரிமையாளர் பொ. விமலேந்திரன் அவர்கட்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

*61/2, Abdul Gaffoor Mawatha*
*Colombo 3*

*திருமதி விமலா மணிவாசகன்*
*மலர் ஆசிரியை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை மனப்பாங்கும் அர்ப்பணிப்பும்

இவ்வருடம் யாழ்நாதம் சஞ்சிகையின் இதழ் 15 விரிந்து எங்கள் சங்க நடவடிக்கைகளையும் குறிக்கோள்களையும் பிரதிபலிக்கின்றது. சென்ற வருடம் (2008) சர்வதேச மகளிர் தினத்தை நினைவு கூர்ந்து எங்கள் முன்னாள் அதிபர் (1993—2006) திருமதி சரஸ்வதி ஜெயராஜாவைக் கௌரவித்தோம்.

1995ம் ஆண்டு நடைபெற்ற இடப்பெயர்வு யாழ் மக்களின் கல்விக்கு ஏற்பட்ட ஒரு பாரிய சவாலாக அமைந்தது. சவால்களும் பிரச்சனைகளும் எம் வாழ்க்கையில் வந்துகொண்டே இருக்கும். இவற்றை எதிர்கொண்டு போராட எமக்குத் தன்னம்பிக்கை, ஊக்கம், சேவை மனப்பாங்கு, அர்ப்பணிப்பு, அயராத உழைப்பு, ஆளுமைத்திறன் என்பன தேவை. இவையெல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவர்தான் திருமதி சரஸ்வதி ஜெயராஜா.

இடப்பெயர்வின் பின் திரும்பிக் கல்லூரிக்கு வந்தபோது கல்லூரித் தளபாடங்கள், உபகரணங்கள், ஆவணங்கள் என்பன அநேகமாக இருக்கவில்லை. ஆனாலும் திருமதி சரஸ்வதி ஜெயராஜா மனம் தளரவில்லை. புதுமைப் பெண்ணாக சேவை மனப்பாங்குடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு மிகுந்த சிரமத்தின் மத்தியில் கல்லூரியை பழைய நிலைக்கு உயர்த்தியுள்ளார். இவ்வாறு சேவை மனப்பாங்கும் அர்ப்பணிப்பும் உள்ள பெண்களைக் காண்பது அரிது. இவரை ஒரு தடவையல்ல பலதடவைகள் கௌரவித்தாலும் இச் சாதனைக்கு ஈடாகாது.

எங்கள் கல்லூரியுடன் தொடர்பில்லாவிட்டாலும் பெண்கள் அமைப்பு என்ற முறையில் நாம் துர்க்காக துரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அவர்களை இங்கு நினைவு கூருவது சாலப் பொருந்தும். இவர் சேவை மனப்பாங்குடனும் அர்ப்பணிப்புடனும் செயலாற்றிய செஞ்சொற் செம்மல் ஆவார். "ஸ்ரீதேவி பாரில் அவதரித்தாளோ?" எனும் இவரைப்பற்றிய கட்டுரையை இவ்விதழில் பிரசுரிப்பதில் பெருமைப் படுகிறோம்.

புலம் பெயர்ந்து கனடா சென்றாலும் எங்கள் சங்க முன்னாள் செயற்குழு உறுப்பினரான திருமதி சத்தியலெட்சுமி சிவலிங்கம் எங்களை மறவாமல் தானாகவே "ஒன்று கூடல் (கனடா)" எனும் நிகழ்ச்சியை இவ்விதழில் பிரசுரிப்பதற்கு அனுப்பியுள்ளார். இதற்கு நன்றி சத்தியா.

எங்கள் சங்க நிகழ்வுகள் எல்லாவற்றிற்கும் வருகை தந்து எங்களை ஊக்குவிப்பவர்களில் ஒருவராகிய திரு அரசரட்ணம் அவர்கள் (எங்கள் சங்க செயற்குழு உறுப்பினரான திருமதி ருக்மணியின் அன்புக் கணவர்) 2009-01-21 அன்று காலமானார். அவரின ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கிறோம்.

Tel: 2573638
E-mail: ambalv@slt.lk

திருமதி சிவகாமி அம்பலவாணர்
சங்கத் தலைவி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'மங்கையராகப் பிறப்பதற்கு மாதவம் செய்திடவேண்டுமம்மா'

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்-கொழும்பு, நடாத்தும்

# சர்வதேச மகளிர் தின நிகழ்வு

இந்நிகழ்வு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 09.03.2008 ஞாயிற்றுக் கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணரின் தலமையில் நடைபெற்றது.

* * * * * * * *

திருமதி சரஸ்வதி ஜெயராஜா, திருமதி வனஜா தவயோகராஜா, திருமதி சிவகாமி அம்பலவாணர், செல்வி சற்சொரூபவதி நாதன், திருமதி அபிராமி கயிலாசபிள்ளை, திருமதி சிவச்செல்வி சிவலோகநாதன், திருமதி குகஜோதி விஜயநாயகம், திருமதி சர்மினி சிறீ பிரேந்திரன், திருமதி கௌரி ரமணா, செல்வி சிவமலர் சுப்பிரமணியம், திருமதி பொன்மலர் கந்தசாமி ஆகியோர் மங்கல விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்கள்.

* * * * * * * *

இன்னிசையுடன் தேவாரம் பாடிய திருமதி சிவச்செல்வி சிவலோகநாதனும் திருமதி குகஜோதி விஜயநாயகமும் கல்லூரிக் காலத்திலிருந்தே தாம் சரஸ்வதி கடாட்சம் பெற்றவர்கள் எனக் காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். சங்க அங்கத்தவர்கள் எல்லோரும் சேர்ந்து கல்லூரிக்கீதம் பாடினார்கள்.

* * * * * * * *

சங்கத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்து வருபவரும் சங்கச் செயலாளராகவும் பொருளாளராகவும் மாறி மாறி செயற்குழு அலுவல்களைக் கவனித்து வந்தவரும் சென்ற ஆண்டு தொடக்கம் தலைவியாக பணிபுரிபவருமாகிய திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார்கள்.

* * * * * * * *

சிறப்பு நிகழ்வு : யாழ் இந்து மகளிர் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி கல்லூரியை அதன் பழைய நிலைக்கு உயர்த்துவதில் வெற்றி கண்ட அதிபர் **திருமதி சரஸ்வதி ஜெயராஜ்** சிறந்த பெண்மணியாகப் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்படுதல். (அதிபரை வரவேற்கும் படம் முன் உள்அட்டை)

இவருக்கு சங்கத்தின் சார்பில் உபதலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளை பொன்னாடை போர்த்தார். (படம் முன் உள்அட்டை) செல்வி சற்சொரூபவதி நாதன் மலர்மாலை அணிவித்தார். சங்கத் தலைவி திருமதி சிவகாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலவாணர் பரிசு வழங்கினார். (படம் முன் உள்அட்டை)

* * * * * * * *

அடுத்த அம்சமாக திருமதி சரஸ்வதி ஜெயராஜ் அவர்களைப் பாராட்டி சில வார்த்தைகள் பேசினார்கள். முதலில் பேசிய செல்வி சற்சொரூபவதி நாதன் 10 ஆண்டுகளுக்கு மேலாகச் சங்கத் தலைவியாக கடமையாற்றி சங்கத்தை வழி நடத்தினார். இன்னமும் அவரே சங்கத்தை வழிநடத்திக் கொண்டிருக்கிறார். இவரை நாம் 2005ம் ஆண்டு 'சகலகலா வித்தகி' என்னும் பட்டம் அளித்துக் கௌரவித்தோம். 44 வருட ஊடகத்துறை சேவை மூலம் எங்கள் கல்லூரிக்குப் புகழ் ஈட்டித் தந்திருக்கிறார்.

* * * * * * * *

அடுத்து உரையாற்றிய திருமதி அபிராமி கயிலாசபிள்ளை சங்கப் பொருளாளராக 10 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றியவர். இன்னமும் சங்க நிதியைப் பேணுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார். இவரை நாம் 2006ம் ஆண்டு 'பார் புகழ் சேவகி' எனப் பெயர் சூட்டிக் கௌரவித்தோம்.

* * * * * * * *

கல்லூரித் தேவைகளை அறிந்து இயலுமானவரை அதைப் பூர்த்தி செய்வதில் திருமதி சரஸ்வதி ஜெயராஜாவுடன் நெருங்கிய தொடர்புகொண்டு உழைத்தவராகிய சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணர் சில வார்த்தைகள் திருமதி ஜெயராஜாவைப் பற்றிக் கூறினார்கள்.

* * * * * * * *

திருமதி சர்மினி சிறீ பிரேந்திரன் விழா நாயகியின் மாணவியும், எங்கள் கல்லூரியின் பழைய மாணவியுமாவார். இவர் கலைப்பிரிவில் கல்வி பயின்று, சட்டத்துறையில் (Law) பல்கலைக்கழகத்திற்கு செல்லும் தகுதி பெற்று, கொழும்பு பல்கலைக் கழகத்தில் இருந்து சட்ட பட்டதாரியாக மேன்மைச் சித்தி பெற்று (LLB Law, Honours) வெளிவந்துள்ளார். தற்போது முருகேசு நீலகண்டன் ஸ்தாபனத்தில் திருவாளர் கந்தையா நீலகண்டனின் கீழ் வேலைசெய்கிறார். இவர் சில வார்த்தைகள் தனது ஆசிரியரைப் பற்றி உரையாற்றினார்.

* * * * * * * *

பல அலுவல்களுக்கு மத்தியிலும் இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கோதை நகுலராஜா எங்கள் அழைப்பை ஏற்று வந்து விழா நாயகியைப் பற்றி உரையாற்றினார். இவர் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் பொருளாதாரம் (Economics) கற்பித்த ஆசிரியை. சமய அறிவு நிறைய உடையவர். 'பிரசங்கங்கள்' செய்வதில் பாண்டித்தியம் பெற்றவர். Training College இற்கு ஒருவர் தேவைப்பட்டபடியால் யா. இ. ம. கல்லூரியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து Training College இற்குச் சென்றார். பின்பு தகுந்த பட்டங்கள் பெற்று, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரிக்கு அதிபராக பதவி ஏற்றுள்ளார். திருமதி சரஸ்வதி ஜெயராஜாவைப் பற்றி நன்கு அறிந்த ஒருவர்.

* * * * * * * *

எங்கள் சங்கம் ஸ்தாபிக்க காரணகர்த்தாவாக இருந்த திருமதி தயாநிதி செல்வநாயகம் இங்கு நேரில் வரமுடியாவிட்டாலும் தன் எண்ணங்களை எழுத்தில் வடித்து அனுப்பியுள்ளார். இவரை நாங்கள் 2007ஆம் ஆண்டு சிறந்த பெண்மணியாகக் கௌரவித்தோம். இவர் எழுதிய குறிப்பை செல்வி சற்சொரூபவதி நாதன் வாசித்தார்.

* * * * * * * *

தொடர்ந்து விழா நாயகி திருமதி சரஸ்வரி ஜெயராஜா ஏற்புரை வழங்கினார்.

* * * * * * * *

அடுத்த நிகழ்வாக எமது வருடாந்த சஞ்சிகையான யாழ் நாதம் இதழ் 14 வெளியிடப்பட்டது. மிகவும் குறுகிய காலத்தில் கணினி கலையில் தேர்ச்சி பெற்று யாழ்நாதம் இதழ்களை அச்சுக்கோர்க்கும் ஆற்றல் பெற்றுள்ள. இதழாசிரியர் திருமதி விமலா மணிவாசகன் இதழ் அறிமுகம் செய்தார். பின்பு இதழாசிரியர் முதல் பிரதியை நிகழ்வுக்குச் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த திருமதி வனஜா தவயோகராஜாவுக்கு வழங்கி சஞ்சிகை வெளியீட்டை ஆரம்பித்து வைத்தார். (படம் முன் உள்அட்டை)

அடுத்த பிரதியை யாழ்நாதம் சஞ்சிகையை வருடந்தோறும் பிரசுரிப்பதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவரும் 13 ஆண்டுகளாக இதழ் ஆசிரியையாகக் கடமையாற்றியவருமான சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணர் விழாநாயகி திருமதி ஜெயராஜாவிற்குக் கையளித்தார். (படம் முன் உள்அட்டை) சங்க அங்கத்தவர்கள் சபையோருக்குப் பிரதிகள் வழங்கினார்கள். யாழ் நாத ஆசிரியர் திருமதி விமலா மணிவாசகன் அச்சுக்கோத்த இதழ் பிரதிகள் சபையோர் கைகளில் கிடைக்கப்பெற்றது.

* * * * * * * *

இதனைத் தொடர்ந்து இரத்மலானை இந்துக் கல்லூரி சக்தி இல்ல மாணவிகளின் இன்னிசை விருந்து இடம்பெற்றது. (படம் முன் உள்அட்டை)

* * * * * * * *

நிகழ்வின் சிறப்பம்சமாக சமூக சேவகியும், தொழில் வல்லுனரும் எங்கள் சங்க செயற்குழு உறுப்பினருமான திருமதி மிதிலா ஸ்ரீபத்மநாதன் "ஆளுமை அபிவிருத்தி" பற்றிய கருத்தரங்கை நடாத்தினார். திருமதி மிதிலா ஸ்ரீபத்மநாதனுக்கு உதவியாக திருவாளர் ஜே. என். எஸ் செல்வனும் மதன் ராஜ் ஜும் உரையாற்றினார்கள். திருமதி மிதிலா காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் உயர்பதவி வகிக்கிறார். இவர் பருத்திச் சேலை விற்பனையில் சிறந்து விளங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கலாஞ்சலி சாறீஸ்” நிறுவனத்தின் உரிமையாளருமாவார்.

திருவாளர் ஜே. என். எஸ் செல்வன், எண் கலை வல்லுனர் (Numerologist), T V மூலம் மிகவும் பிரபலமானவர். ஆளுமை அபிவிருத்தி பற்றி சில கருத்துக்கள் கூறினார். இவர் அண்மையில் கொழும்புத் தமிழ் சங்கத்தில் ‘எண்களும் எண்ணங்களும்’ பற்றி உரையாற்றியுள்ளார்.

மதன் ராஜ் CIMA மாணவர் அத்துடன் ஆளுமை அபிவிருத்தியில் தேர்ச்சி பெற்றவர் ஆளுமை அபிவிருத்தி பற்றி உரையாற்றினார்.


* * * * * * * *

சங்கச் செயற்குழுவில் வயது முதிர்ந்தவர்களே பணியாற்றுகிறார்கள் என்னும் குறையைத் தீர்க்க வந்த வயதில் சிறியவரான செயலாற்றல் மிக்க சங்கச் செயலாளர் திருமதி கௌரி ரமணா நன்றியுரை கூறித் தனது இனிய குரலால் தேவாரம் பாடி விழாவை நிறைவு செய்து வைத்தார்.

* * * * * * * *

இந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கியவர் சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்கள்.

* * * * * * * *



யாழ். இந்து மகளிர் கல்லூரியின் புகழ் பூத்த மாணவியும், விஞ்ஞான பட்டதாரியும், எமது சங்கத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவரும், சங்கத்தின் தலைவியாக பணியாற்றிக் கொண்டு இருப்பவருமாகிய திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்களை சர்வதேச மகளிர் தின விழாவான இன்று (2009.03.08) கௌரவிப்பதில் நாம் எல்லோரும் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். அத்துடன் அவருக்கு வாழ்த்தும் தெரிவிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணரின்

# தலைமையுரை

விழா நாயகி திருமதி சரஸ்வதி ஜெயராஜா, திருமதி வனஜா தவயோகராஜா, இந் நிகழ்வில் பங்குபற்ற உள்ளோர், மற்றும் இங்குள்ள பெரியோர்கள், தாய்மார்கள், அன்புச் சகோதரிகள், மழலைச் செல்வங்கள் எல்லோருக்கும் எனது வணக்கங்கள்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் – கொழும்பு, நடாத்தும் இன்றைய சர்வதேச மகளிர் தின நிகழ்விற்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் வருக வருக என அன்புடன் வரவேற்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். எங்கள் அழைப்பை ஏற்று இவ்விழாவிற்கு வருகை தந்து இன்றைய இனிய மாலைப்பொழுதை எம்முடன் நீங்கள் கழிப்பது எமக்கு மிகவும் உற்சாகமூட்டுகிறது.

சர்வதேச மகளிர் தினத்தை நாம் கொண்டாடுவதால் மகளிர் பற்றி சிலவார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இன்றைய உலகில் பெண்கள் கல்வியில் சிறந்து ஆண்களுக்குச் சரிநிகர் சமமாகக் காணப்படுகிறார்கள். மற்றும் எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்குச் சமமாகப் பிரகாசிக்கிறார்கள். கலை, கணிதம், விஞ்ஞானம், தொழில் நுட்பம், வைத்தியத் துறை, கணினி என பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கும் பெண்களை நாம் காண்கின்றோம். ஆனாலும் இவ்வாறு உன்னத நிலையில் உள்ள பெண்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவாகவே காணப்படுகிறார்கள்.

பெண்களாகிய நாம் சர்வதேச மகளிர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு முக்கிய காரணம் இன்னும் பெண்கள் கொடுமைப்படுத்தப்படுவதும், அடிமைகளாகக் கருதப்படுவதும், பாதுகாப்பற்ற சூழலில் வாழ்வதும், இரண்டாம் தர பிரஜைகளாகக் கணிக்கப் படுவதும் தொடர்ந்து இருந்து வருவதால்தான்.

மேலும் வெளிநாடுகளுக்குச் சென்று வேலை செய்யும் பெண்கள் எங்கள் நாட்டின் பொருளாதாரத்தை (Economy) கட்டி எழுப்புவதில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலேயே உழைக்கிறார்கள். இவர்களைப் பற்றி புதினப் பத்திரிகைகளில் நெஞ்சை உருக்கும் செய்திகள் வெளிவருவதையும் நாம் காண்கிறோம். சில சமயங்களில் செய்த உழைப்புக்கு ஊதியம் பெறாமல், உடல் உறுப்புகளை இழந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில், நினைவற்ற நிலையில் (coma), உயிரற்ற உடல்களாக (dead bodies) அவர்கள் இங்கு வருவதை அறிகிறோம். இந்நிலை மாற்றப்படவேண்டும்.

ஆண் பெண் என இருவர் திருமண பந்தத்தில் இணையும்போது மனைவியானவள் வீட்டுக்குள் சிறைப்பட்டு இருந்து வீட்டுவேலைகளைச் செய்து, கணவனின் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்து, பிள்ளைகளைப் பெறும் ஒரு இயந்திரமாகத் தொழில்படவேண்டும் என்ற நிலை முற்றாக மாறவேண்டும். இந்நிலை இன்னும் சில குடும்பங்களில் காணப்படுகிறது. இதில் நாம் எவ்வளவோ முன்னேறிவிட்டோம். பல குடும்பங்களில் கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் சமமாகவே மதிக்கிறார்கள். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பதும் எடுத்துக்கொள்வதும் (give in and take up) சமமாகவே உள்ளது.

அடுத்ததாக 'கற்பு' என்பது பெண்களுக்கு மட்டுமே விதிக்கப்பட்ட நிர்ப்பந்தம். ஆண்களுக்கு கற்பு என்னும் நிர்ப்பந்தம் இல்லை. எங்கள் சமுதாயச் சீர்கேடுகளுக்கும் பெண் அடிமைத்தனத்திற்கும் இந்த 'ஒரு பக்கக் கற்பு' ஒரு காரணியாக விளங்குகிறது. இதை மாற்றி ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே விதமான கற்பு நிர்ப்பந்திக்கப்படணே்டும். தினமும் அதிகரித்துச் செல்லும் பாலியல் வன்முறைகளையும், வல்லுறவுகளையும் இல்லாது ஒழிக்கவேண்டும்.

சர்வதேச மகளிர் தினத்தை நினைவு கூரும் இவ்வேளையில் பெண்கள் விடுதலை பற்றி நாம் சிறிது சிந்திக்கவேண்டும். பெண்களின் விடுதலை பெண்களாகிய எங்கள் கைகளிலேயே உள்ளது.

பண்பாடு, பாரம்பரியம், சாதி, மதம், சாஸ்திரம், என்று தொன்றுதொட்டு வழங்கி வருபவைகளை மூட நம்பிக்கையுடன் பின்பற்றக்கூடாது. இவைகள் ஆண்கள் சுயநலத்துடன் தமது சுகத்திற்காக வழக்கத்தில் கொண்டுவந்தவை. ஏன்? எதற்கு? எப்படி? என ஆராய்ந்து இவற்றில் நல்ல அம்சங்களை எடுத்துக்கொண்டு கூடாதவற்றைக் களைந்தெறியவேண்டும்.

பெண்களின் தொடர்ச்சியான போராட்டத்தினால் பெண்கள் பாதுகாப்புக்காகச் சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் பெரும்பாலும் இச்சட்டங்களின் பயன்கள் பெண்களைச் சென்றடைவதில்லை. பெண்கள் இச்சட்டங்களைக் கற்றறிந்து அவற்றைப் பயன்படுத்தவேண்டும்.

பாலியல் வன்முறைகளையும், வல்லுறவுகளையும் எதிர்ப்பதற்குப் பெண்கள் தம்மைத்தாமே காக்கும் திறமை பெற்றிருக்கவேண்டும். ஆண் பிள்ளைகள் போன்று சிறுமிகளுக்கும் தைரியம், பலம், எதிர்க்கும் திறன், துணிவு என்பன உண்டாகும்படி வளர்க்கவேண்டும். கராத்தே போன்ற தற்காப்புக் கலைகளையும் பயிற்றுவிக்கவேண்டும்.

முற்றாக பெண் அடிமைத்தனம் நீக்கப்படவேண்டும். பெண் உரிமை பேணப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஒவ்வொரு வருடமும் எம் கல்லூரியுடன் தொடர்புடைய ஒரு சிறந்த பெண்மணியைக் கௌரவித்து வருகிறோம். இதை நாம் ஒரு அவசியமான செயலாகக் கருதுகிறோம். மாதர் சங்கம் என்ற முறையில் நாம் அவர்களின் சேவைக்கு அங்கீகாரம் வழங்குகின்றோம்.

இவ் வருடம் யாழ் இந்து மாணவிகளின் கல்வி வளர்ச்சிக்கும் எங்கள் கல்லூரியின் வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்ட எங்கள் முன்னாள் அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜாவை சிறந்த பெண்மணியாகத் தேர்ந்தெடுத்து இன்று கௌரவிக்க உள்ளோம். இவர் எங்கள் சங்க உறுப்பினர்களுடன் ஒரு சகோதரி போலப் பழகி நாம் எம்மாலான உதவியை எங்கள் கல்லூரிக்கு வழங்க ஒரு காரணியாக அமைந்திருந்தார். எமது கல்லூரித் தாய்க்கு உதவிய மனநிறைவை எமக்களித்த திருமதி ஜெயராஜாவைக் கௌரவிப்பதில் நாம் பெருமைப் படுகிறோம்.

எங்கள் வருடாந்த சஞ்சிகையான யாழ்நாதம் இதழ் 14 முதல் பிரதியைப் பெறுவதற்கு வருகை தந்திருக்கிறார் திருமதி வனஜா தவயோகராஜா. இவர் பல வருடங்களாக கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின் பொருளாளராக கடமையாற்றி தற்பொழுது உபதலைவியாக விளங்குகின்றார். பிரபல தொழிலதிபர் திருவாளர் தவயோகராஜா அவர்களின் அன்பு மனைவியாவார். ஆதரவு அற்றவர்களுக்கு உதவும் தரும ஸ்தாபனங்களில் கடமையாற்றுகிறார். அவரும் அவரது கணவரும் உதவி கேட்டு வருவோருக்கு மலர்ந்த முகத்துடன் உதவி செய்பவர்கள்.

தொடர்ந்து கௌரவமும் பேச்சுகளும் நடைபெறும். பிறகு யாழ்நாதம் இதழ் 14 வெளியிடப்படும். அடுத்து அகில இலங்கை இந்து மாமன்ற ஆதரவில் இயங்கும் சக்தி இல்ல மாணவிகளின் இன்னிசை விருந்து இடம்பெறும். அதனைத் தொடர்ந்து திருமதி மிதிலா ஸ்ரீபத்மநாதன் ஆளுமை அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கை நடாத்தவுள்ளார். பின்னர் சங்கச் செயலாளர் திருமதி கௌரி ரமணா நன்றியுரை கூறித் தேவாரம் பாடி விழாவை நிறைவேற்றி வைப்பார்.

எமது அழைப்பை ஏற்றுப் பெருந்திரளாக இங்கு வந்த உங்கள் அனைவருக்கும் நாம் நன்றி தெரிவிக்கிறோம். அத்துடன் முழு நிகழ்விற்கும் நின்று எம்மை மகிழ்வித்து உற்சாகமூட்டுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம். விழா நாயகியைப்பற்றி அறிய ஆவலாக உள்ள உங்களை அதிக நேரம் காக்க வைக்காமல் இத்துடன் எனது உரையை நிறுத்திக் கொள்கிறேன்.

நன்றி

வணக்கம்.

*09.03.2008*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க உபதலைவி செல்வி சற்சொரூபவதி நாதனின் உரை

திருமதி. சரஸ்வதி ஜெயராஜ் நயினாதீவில் தமது ஆரம்பக் கல்வியை கற்றார். பின்னர் வேலணை மத்திய கல்லூரியிலும் இராமநாதன் மகளிர் கல்லூரியிலும் தனது இடைநிலைக் கல்வியை கற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்று B.A.Hons பட்டதாரியானார். பின் யாழ். பல்கலைக்கழகத்தில் Diploma in Education கற்கை நெறியை பூர்த்தி செய்தார்.

முதலில் சொந்த ஊரான நயினாதீவில் ஆசிரிய சேவையை ஆரம்பித்தார். தொடர்ந்து கொழும்பு விவேகானந்தா கல்லூரி, யாழ்ப்பாணம் St . Mary's கல்லூரி, திருநெல்வேலி முத்துத்தம்பி வித்திலாலயம் ஆகிய பாடசாலைகளில் கற்பித்தார். பின்னர் Cluster Principal ஆக கோண்டாவில், ஏழாலை ஆகிய இடங்களில் பணியாற்றினார். இவர் அதிபர் தரம் 1 (Principal Grade-1) ஆக பதவி வகித்தார். கல்வித்திணைக்கள உதவி பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

*1993–10–21* தொடக்கம் *2006–01–15* வரை யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபராக பணியாற்றி ஓய்வு பெற்றார். Delhi சென்று முகாமைத்துவ பயிற்சியும் பெற்றார். Bankok இல் நடைபெற்ற Asian Pacific Conference இல் பங்கு பற்றினார். இவர் அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட உப தலைவராக விளங்கினார்.

*1995*இல் ஏற்பட்ட பாரிய இடம் பெயர்வின் போது பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் யாவரும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பாடசாலைக் கட்டிடங்கள் சேதத்துக்கு உள்ளாகின, விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள், பாடசாலைத் தளபாடங்கள், மற்றும் ஆவணங்கள் முற்றாக அழிந்து விட்டன. பாடசாலை மீளத்தொடங்கிய போது மிகுந்த சிரமத்தின் மத்தியில் சகலதுறைகலையும் புனர்அமைக்க வேண்டி ஏற்பட்டது. இவ்வேளையில் அரசசார்பற்ற நிறுவனங்கள், அரச திணைக்களங்கள், பாடசாலை பழைய மாணவிகள் சங்கங்கள் முதலிய யாவருடனும் தொடர்பு கொண்டு அர்ப்பணிப்புடன் பணியாற்றி பாடசாலையை முன்னேற்றிய இவரது பணி என்றும் மறக்க முடியாதது.

இவரது கணவர் திரு. ஜெயராஜ் அவர்கள் வரி மதிப்பீட்டாளராக கடமை யாற்றுகிறார். இவர் Assessor in Charge, Dept. of Inland Revenue -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Jaffna Branch இல் கடமை யாற்றி ஓய்வு பெற்ற பின்னரும் Extension கிடைத்து தொழில் புரிகிறார். மனைவிக்குப் பின்னனியில் இருந்து சகல உதவிகளும் வழங்கும் ஒரு கணவராக இருக்கிறார்.

இவரது மூத்த மகள் திருமதி. பவித்திரா பரமேஸ்வரன் யாழ். பல்கலைக் கழகத்தில் History Special செய்து பட்டதாரியானார். இப்பொழுது பவித்திரா Dubai இல் Master of Business Administration படிக்கிறார். இவரது கணவர் அசோக் பரமேஸ்வரன் Quantity Surveyor ஆக Dubai இல் கடமை யாற்றுகிறார்.

இவரது முதலாவது மகன் ரவி குமார் பெங்களூர் பல்கலைக் கழகத்தில் Bachelor of Computer Application பட்டதாரியாவார். இப்பொழுது East London University யில் M . Sc. படிக்கின்றார்.

இவரது இரண்டாவது மகள் சுமித்திரா கிழக்கு பல்கலைக் கழகத்தில் B . A முடித்துள்ளார்.

இவரது இளைய மகன் சுகன்ராஜ் கொழும்பில் Quantity Surveyor Course செய்கிறார்.

வடக்கு கிழக்கு மாகாணசபை தமிழ்த்தினம் எப்படி வைப்பது என்று திரு. தியாகலிங்கம் அவர்கள் திகைத்த போது கைகொடுத்து இந்து மகளிர் கல்லூ ரியில் அதனை சிறப்புற நடத்த உதவினார்.

படிக்கும் காலத்தில் இருந்தது போன்று இவரது விளையாட்டு ஆர்வம் கல்லூ ரியிலும் அத்துறைக்கு முன்னுரிமை அளிக்க வைத்தது.

நடனம், இசை ஆகியவற்றில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் பெற்றிருந்த திறமையை நாம் நேரில் கண்டு களிக்கக்கூடியதாக கஷ்டமான காலத்தில் தனியாக பேருந்து ஒழுங்கு செய்து மாணவிகளையும், ஆசிரியர்களையும், பக்க வாத்திய கலைஞர்களையும் கொழும்புக்கு 2003இல் அழைத்து வந்து சிறந்த கலைநிகழ்ச்சியை சரஸ்வதி மண்டபத்தில் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

நான் 2002ஆம் ஆண்டு கல்லூரி பரிசளிப்பு விழாவிற்கு யாழ்ப்பாணம் சென்ற போது அவரது விருந்தோம்பலில் திளைத்தேன். பரிசளிப்பு விழாவை நேர்த்தியாக அவர் நடத்தியது கண்டு பிரமித்தேன். இங்கு எமது நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொண்டு ஆற்றிய உரைகளைக் கேட்டு வியந்தேன். உண்மையில் பெயருக்கு ஏற்ற சரஸ்வதிதான்.

வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க உபதலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளையின் உரை

சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணர், திருமதி சரஸ்வதி ஜெயராஜ், திருமதி வனஜா தவயோகராஜா, சங்க அங்கத்தவர்கள், பெரியோர்கள், குழந்தைகள் எல்லோருக்கும் வந்தனம்.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி எமது ஓய்வு பெற்ற அதிபரை சிறந்த பெண்மணியாகக் கௌரவிக்கும் முகமாக இங்கு கூடியிருக்கின்றோம்.

இன்று எத்துறைகளை எடுத்தாலும் அவற்றில் சாதனை புரிபவர்களாகப் பெண்கள் விளங்குகிறார்கள். கல்வித்துறை, பத்திரிகைத்துறை, ஊடகத்துறை, நிர்வாகத்துறை ஆகிய சகல துறைகளிலும் பெண்களின் பங்கு முக்கிய இடம் வகிக்கின்றது. பெண்கள் நாட்டின் கண்கள் என்பர். பெண்களின் மனதின் ஆழத்தை அறிய முடியாது என்பதன் கருத்து அவர்களின் மனதில் சாதிக்கும் ஆற்றல், அறிவு என்பன மறைந்து இருக்கின்றன என்பதாகும். உலகில், பெண்கள் அரசியலிலும் ஈடுபட்டுத் தங்கள் நாட்டின் தலைவர்களாக விளங்கி நாட்டின் முன்னேற்றத்திற்கு அரிய சேவை ஆற்றி இருக்கிறார்கள். இன்றும் ஆற்றி வருகிறார்கள். இனிமேலும் ஆற்றுவார்கள்.

திருமதி சரஸ்வதி ஜெயராஜா எமது பாடசாலையின் அதிபராக 1993ஆம் ஆண்டு ஒட்டோபர் முதல் 2006ஆம் ஆண்டு ஜனவரி வரை சேவையாற்றி இருக்கிறார்கள். அவர் பொறுப்பேற்ற காலம் எமது சமூகத்திற்கு, குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கல்வித்துறைக்கு, மிகவும் நெருக்கடியான காலமாகும். 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வு எல்லாப் பாடசாலைகளையும் ஒட்டு மொத்தமாகப் பாதித்தது. பாடசாலை உபகரணங்கள் கட்டிடங்கள் எல்லாம் சேதப்படுத்தப்பட்டு, பின் முழுமையாகப் புனருத்தாரணம் செய்ய வேண்டியதாயிற்று. இடம் பெயர்வுக்குப் பின் பாடசாலை ஆரம்பித்தபொழுது, பாடசாலையிலேயே தங்கி இருந்து, அதைப்பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு இவர் ஆற்றிய சேவை என்றும் மறக்க முடியாதது.

கொழும்பு, அவுஸ்ரேலியா, கனடா முதலிய நாடுகளில் இருக்கும் பழைய மாணவர் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களின் உதவியுடன், பாடசாலை முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அருந்தொண்டு ஆற்றியுள்ளார். இவர் காலத்தில் பாடசாலை பல குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுள்ளது. (Furniture) தளபாடங்கள், Computer Lab, Audio Vedio Room, கோயில் மண்டபத் திருத்த வேலைகள், நிலத்திற்கு கல் பதித்தல், முதலிய பல வேலைகள் இவரின் ஊக்கத்தினால் சிறப்பாக நடைபெற்றன. 1999ஆம் ஆண்டு கோயில் கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடந்தது.

1999ஆம் ஆண்டு யூலை மாதம் (22ஆம் திகதி) யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் 30 பேர், ஆசிரியர்கள், பக்கவாத்தியக்காராகள் முதலியோர்களை கலை நிகழ்ச்சிகளை கொழும்பில் நடாத்துவதற்காக அழைத்து வந்து 26ஆம் திகதி சனிக்கிழமை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் சிறப்பாக நடாத்தினார். அப்பொழுது கொழும்புக்கு பயணம் செய்வது மிகவும் கஷ்டமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர் தன்னந்தனியாக கிராம சேவகர்களிடமும், இராணுவ அதிகாரியிடமும் சென்று பேசி அனுமதி பெற்று அவர்களை அழைத்து வந்தார். அவருடைய சேவையின் சிறப்புக்கும், அர்பணிர்ப்புக்கும் உதாரணமாக இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இவர் கல்வித் திணைக்களத்துடன் சீரான உறவைப்பேணி வந்தபடியால், மாகாணமட்ட நிகழ்ச்சிகள், தமிழ்தின விழா, இலக்கிய விழா போன்றவை எமது கல்லூரியிலேயே நிகழ்ந்தன. 1999ஆம் 2002ஆம் ஆண்டுகளில் எமது மாணவர்கள் மாகாணமட்டத்தில் முதற்பரிசு பெற்றுள்ளார்கள். **இவரது சேவைக் காலம் எமது பாடசாலையின் பொற்காலமென்று கூறலாம்.** இவரைச் சிறந்த பெண்மணியாகக் கௌரவிப்பதில் நாமெல்லோரும் பெருமையடைகிறோம். இவர் பல்லாண்டு காலம் தேக ஆரோக்கியத்துடன் வாழ்ந்து எமது சமூகத்திற்குத் தொண்டாற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

வணக்கம்

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்-கொழும்பு, ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வில் திருமதி மிதிலா ஸ்ரீபத்மநாதனின் "ஆளுமை அபிவிருத்தி" பற்றிய கருத்தரங்கில் வழங்கப்பட்ட துண்டுப் பிரசுரம்.

வாழ்க்கை என்பது . . . . . .

1. நடப்பதெல்லாம் நன்மைக்கே என்கிற ரகமா நீங்கள்?
அ. ஆமாம் அதுதானே வாழ்க்கை? ஆ. வாழ்க்கை என்றால் நல்லது இருக்கும் கெட்டதும் இருக்கத்தானே செய்யும்? இ. அப்படித்தான் இருக்க நினைக்கிறேன் ஆனா முடியல

2. வருடம் முழுவதும் விடுமுறையை நினைத்து ஏங்குபவரா நீங்கள்?
அ. ஆமாம் கலண்டரில் குறித்த வைத்துக் கொண்டே அதை எதிர்பார்ப்பேன்.
ஆ. விடுமுறை பிடிக்கும். ஆனால் அதற்காக ஏங்குவதெல்லாம் இல்லை.
இ. விடுமுறைக்கும், எனக்கும் ராசியே இல்லை. எப்போதும் ஏமாற்றம்தான்.

3. சாப்பாட்டுக்காக ஷாப்பிங் செய்வது உங்களுக்குப் பிடிக்குமா?
அ. அப்படியெல்லாம் இல்லை. ஆ. ஆமாம் என்ன சமைக்கப் போகிறோம் என்பதற்காக அதிகம் பிடிக்கும். இ. அதைப்பற்றியெல்லாம் அதிகம் அலட்டிக்கொள்வதில்லை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருமதி சரஸ்வதி ஜெயராஜா

சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணரின் பார்வையில்

திருமதி சரஸ்வதி ஜெயராஜா 1993ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ம் திகதியிலிருந்து 2006ம் ஆண்டு ஜனவரி மாதம் 15ம் திகதிவரை யாழ் இந்து மகளிர் கல்லூரி அதிபராகப் பதவி வகித்தார். அவருடனான அறிமுகம் எனக்கு 1993ம் ஆண்டிலேதான் ஏற்பட்டது. எங்கள் சங்கம் ஸ்தாபித்த ஆண்டும் அதுவாகும். சங்கம் ஸ்தாபித்த ஆரம்பத்திலே சங்கத்தின் நிதி சொற்பமாகவே இருந்தது. அதனால் ஆரம்பத்தில் கல்லூரிக்கு எங்கள் சங்கத்தினால் அதிகம் உதவி செய்யமுடியவில்லை.

சங்கத்தில் ஓரளவு நிதி சேர்ந்தபோது எங்கள் கல்லூரி கஷ்ட நிலையில் இருந்தது. 1996ம் ஆண்டு எல்லோரும் இடம் பெயர்ந்து சென்றுவிட்டு மீண்டும் கல்லூரிக்கு வந்தபோது கல்லூரித் தளபாடங்கள் உபகரணங்கள் அநேகம் களவு போய் இருந்தன. அச்சமயம் சங்கச் செயலாளராகிய நான் எங்கள் சங்கத்தின் சாாபில் அதிபராகிய திருமதி ஜெயராஜாவிடம் கல்லூரியின் அத்தியாவசிய தேவைகளைப் பற்றிக் கேட்டுக் கடிதம் அனுப்பியிருந்தேன். அச் சந்தர்ப்பத்தில் இருந்து எனக்கு அவருடன் மிகவும் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிட்டியது.

அத்தியாவசிய தேவைகளை அவர் வரிசைக் கிரமத்தில் (Priority basis) எங்களுக்குத் தெரியப்படுத்தினார். அதன்படி 1996ம் ஆண்டு தமிழ் தட்டச்சு யந்திரமும் (Tamil Typewriter), பிரதி செய்யும் யந்திரமும் (Roneo Machine) 1997ம் ஆண்டு ஆங்கில தட்டச்சு யந்திரமும் (English Typewriter) நூல் நிலையத்திற்குப் புத்தகங்களும் வாங்கி அனுப்பினோம். அதன் பின்பு ஒவ்வொரு வருடமும் கல்லூரியின் தேவைகளை அதிபரிடம் கேட்டறிந்து இயலுமானவற்றை அனுப்பி வைக்கிறோம். 1996ம் ஆண்டும் 1997ம் ஆண்டும் கல்லூரி இக்கட்டான நிலையில் இருந்த போது எங்கள் சங்கம் செய்த உதவி போற்றற்குரியது என பல தடவைகள் திருமதி ஜெயராஜா எங்களுக்குக் கூறியிருக்கிறார். ஏனெனில் அச் சமயம் பரீட்சைக்கு வினாத்தாள்கள் அச்சிடுவதற்கோ அச்சிட்ட வினாத்தாள்களைப் பிரதி செய்வதற்கோ பல இடங்களுக்கும் சென்று பலருடைய உதவியையும் நாடவேண்டிய நிலையில் அதிபர் இருந்தார்.

எங்கள் சங்கம் கல்லூரிக்குச் செய்யும் உதவிகளை நன்றிகூர்ந்து 2002ம் ஆண்டுக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவிற்கு அப்போதைய எங்கள் சங்கத் தலைவி செல்வி சற்சொரூபவதி நாதனைப் பிரதம அதிதியாகக் கல்லூரி அதிபர் அழைத்துக் கௌரவித்தார். சங்கச் செயலாளர் திருமதி சிவகாமி அமபலவாணரை சிறப்பு விருந்தினராக அழைத்து கல்லூரிச் சஞ்சிகையை வெளியிடுமாறு கேட்டுக் கௌரவித்தார். ஏனைய சங்க உறுப்பினர்களையும் சிறப்பு விருந்தினர்களாக அழைத்து வருகை தந்து தங்குமிட வசதிகள் இல்லாதவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2003ம் ஆண்டு எங்கள் கல்லூரியின் மணிவிழாவிற்கு எங்கள் சங்கப் பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளையைப் பிரதம அதிதியாக அழைத்துக் கௌரவித்தார். அத்துடன் அவரது கணவர் திரு. விசுவநாதர் கயிலாசபிள்ளையைக் கல்லூரிச் சஞ்சிகையை வெளியிடுமாறு கேட்டுக் கௌரவித்தார்.

இவரது துணிவும் கல்லூரிக்கான அர்ப்பணிப்பும் கல்லூரியுடன் தொடர்புடைய எல்லோர் மனதிலும் நிறைந்து நிற்கும். ஒரு சமயம் கல்லூரி மாணவியொருவர் கல்லூரிச் சீருடையில் ஒரு ஆண்மகனுடன் நிற்பதாக இவருக்குத் தகவல் கிடைத்தது. இத் தகவல் கிடைத்தவுடன் அந்த மாணவி இருக்கும் இடம் செல்ல ஆயத்தம் செய்தார். இவருடைய் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அங்கு செல்லவேண்டாம் எனப் பலர் இவரைத் தடுத்தனர். ஆனால் இவரோ என்னைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. என்னுடைய மாணவியைக் காப்பாற்ற வேண்டியது எனது கடமை. நான் இதை நிறைவேற்றியே தீருவேன் எனக் கூறினார். இவர் சற்றும் தாமதியாமல் துணிவுடன் தன் நண்பர் ஒருவரை வரவழைத்து அந்த நண்பரின் மோட்டார் சைக்கிளில் பின் ஆசனத்தில் அமர்ந்து குறிப்பிட்ட மாணவி நிற்குமிடம் சென்று அந்த மாணவியைக் காப்பாற்றி அழைத்துச் சென்று பெற்றோரிடம் ஒப்படைத்தார்.

முக்கியமாக எனது கணவரும் நானும் பல இடங்களுக்கும் சென்று பலருடைய அனுமதிகளும் பெற்று A9 பாதையூடாக கல்லூரிக்குத் தேவையான பொருட்களை கொணடு செல்வோம். அதில் உள்ள சிரமங்களை திருமதி ஜெயராஜா நன்கறிவார். நாங்கள் முன்கூட்டியே அவருக்கு அறிவித்துவிட்டுச் செல்வோம். இவர் தமது வேலைகளை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு எமது வருகைக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருந்து மகிழ்வுடன் வரவேற்பார். நாம் கல்லூரிக்குப் பொருட்களைக் கையளித்ததும் அவர் செய்யும் விருந்தோம்பலில் எங்கள் களை மாறிவிடும்.

நாம் கல்லூரிக்கு IBM கணினிகள், மேலிருந்து படம் காட்டும் கருவி, ஒலிபெருக்கிக் கருவி. நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேகத்திற்கு உதவி, கல்லூரி ஆய்வு கூடத்திற்கு உபகரணங்கள், வறிய மாணவிகளுக்குப் பணஉதவி, கல்லூரி மேடைக்குத் திரைச்சீலை போன்ற அன்பளிப்புக்களைச் செய்துள்ளோம். அத்துடன் கல்லூரி மாணவிகளை இரு தடவைகள் இங்கு வரவழைத்து அவர்களது கலை நிகழ்வுகளை நடத்தினோம். எங்கள் சேவைகளைத் திறம்படச் செய்வதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர் திருமதி ஜெயரா ஜா அவர்களே என்றால் மிகையாகாது.

திருமதி ஜெயராஜா கல்வி, நுண்கலை, விளையாட்டு, ஒழுக்கம் போன்ற எல்லாத் துறைகளிலும் கல்லூரி மாணவிகளைச் சிறப்புறச் செய்தார். இதனால் அகில இலங்கையிலும் எங்கள் கல்லூரி பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர்
திருமதி. சரஸ்வதி ஜெயராஜாவை கௌரவிக்கின்ற நிகழ்வில்

## திருமதி. ஷெர்மினி ஸ்ரீபிருந்திரன் ஆற்றிய உரை

இன்றைய நாள் நம் இந்து மகளிர்க்கு இருவகையில் பொன்னாள். மங்கையராம் எம்மை மாண்புறப் போற்றுகின்ற மங்கையர் நாள், அதே நேரம் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் மங்கையர் மாண்புடன் போற்றிய நம் அதிபர் சரஸ்வதி ஜெயராஜாவிற்கு நாமெல்லாம் பெருமையோடு விழா எடுக்கின்ற ஒரு உன்னதமான நாள்.

சரஸ்வதி என்றவுடனேயே எமக்கு ஞாபகம் வருவது நம் கல்வித் தெய்வமாம் வெண்தாமரை அரசி சரஸ்வதி. அதே தெய்வீகப் புலமையோடும், ஆளுமையோடும், ஆற்றல்களோடும் எம்மையெல்லாம் தலைமை தாங்கி வழிநடாத்திய திருமகள் நம் சரஸ்வதி ஜெயராஜா அவர்கள் உண்மையிலேயே எம் கல்லூரி அதிபர்களில் ஒரு தெய்வீகத் தன்மை வாய்ந்த உன்னதமான அதிபர்.

வரலாற்றை சிறப்புப் பாடமாகக் கற்று அதன் மூலம் மேலைத்தேய, கீழைத்தேய வாழ்வியலைப் பண்பாட்டை உணர்ந்த ஒரு அதிபராகத் திகழ்ந்தவர் திருமதி. சரஸ்வதி ஜெயராஜா அவர்கள்.

பண்பாடு என்றவுடன் எனக்கு என் பிறந்த மண் யாழ் மண் தான் நினைவு வருகிறது. யாழ்ப்பாணம் பண்பாட்டின் உறைவிடம். அத்தகைய மண்ணில் அமைந்தது தான் எம் கல்லூரி. 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை' என்பது நம்மவர் வாக்கு. தொட்டிலில் பிறந்த பிள்ளையை நல்லொழுக்கத்துடன் வாழ வைப்பது அப் பிள்ளையை உருவாக்கிய கல்லூரியே. அந்தவகையில் இன்று எம்மையெல்லாம் இங்கு ஒன்று கூட வைத்த உன்னத ஆலயம் தான் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக யாழ் நகரில் ஒரு சிறந்த பெண்கள் பாடசாலையாக யாழ் இந்து மகளிர் கல்லூரி திகழ காரணமாக அமைந்தவர்கள் அந்தப் பாடசாலையில் விளங்கிய அதிபர்களும், ஆசிரியர்களுமே. அவர்களில் திருமதி. சரஸ்வதி ஜெயராஜா அம்மையார் அவர்கள் அதிபராக இருந்த காலம் ஒரு பொற்காலம். அந்தப் பொற்காலத்தில் எனக்கு அக் கல்லூரியிலே கலைப்பிரிவில் கல்வி கற்று, சட்டப் பீடத்திற்குச் செல்ல கிடைத்த சந்தர்ப்பத்தினை நான் வரப்பிரசாதமாக நினைக்கின்றேன்.

நான் எனது கடந்த கால நினைவுகளை எனது மனக் கண்ணில் மீண்டும் இருத்திப் பார்க்கின்றேன். எமது கல்லூரியின் தற்கால வளர்ச்சியின் உச்சக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டத்திற்கு யார் காரணம்? என்று என்னும் பொழுதெல்லாம் நான் எனது அதிபரை நினைத்துப் பெருமை அடைகின்றேன். இவருடைய காலத்தில் எம் கல்லூரியின் பெறுபேறுகள் யாழ் நகரில் முன்னிலை வரிசையில் இருந்தன என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

சீரான கற்பித்தல், ஒழுங்கான புறநிலைச் செயற்பாடுகள், தமிழ்த்தின விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், இந்து சமய விழாக்கள் என்று ஏராளமானவை.

இதற்கெல்லாம் யார் காரணம்? இத்தகைய நினைவுகளையெல்லாம் ஒழுங்குபடுத்தி, அவற்றை நெறிப்படுத்தி, வெற்றிக்கேற்றவாறு எம்மை வழிப்படுத்தி அனைவரையும் தன் பார்வையால் கவரும் நம் அன்னை சரஸ்வதி ஜெயராஜா அம்மையார் அவர்கள் தான் என்பது வெள்ளிடை மலை.

மேலும் இவர் எமது பாடசாலையின் விசாலாட்சி மண்டபத்தினை அறிவுசார் நிகழ்வுகளை நடாத்த வெளியாட்களுக்கும் அனுமதி வழங்கியவர். இதன் மூலம் பாடசாலை மாணவராகிய எமக்கு அறிவை மேலும் வளர்க்கவும், அதேநேரம் பல்கலைக்கழக மாணவர்களின் அறிவார்ந்த செயற்பாடுகளைப் பெறவும், அதன் மூலம் எமக்குப் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் மேலும் பெருகவும் ஒரு ஊக்குவிப்புக் காரணியாக இவரது செயற்பாடு விளங்கியது.

இவை மட்டுமன்றி கோட்டக் கல்விப் பணிமனையினை எமது பாடசாலையுடன் இணைத்தவர். ஆசிரியர் வள நிலையத்தினை ஸ்தாபித்தவர். அதிபர் சங்கத் தலைவியாகவும் இருந்தவர்.

இவ்வாறெல்லாம் எனது பாடசாலையின் வளர்ச்சிக்கு உழைத்த எமது அன்னை அவர்கள் ஒரு நல்ல அதிபராக மாத்திரமன்றி, நல்லதோர் நிர்வாகியாக மாத்திரமன்றி, நல்லதொரு குடும்பத் தலைவியாகவும் திகழ்ந்தார் என்பதற்கு அவரது பிள்ளைகளின் உயர்நிலை சமர்ப்பணம்.

கற்றபடி ஒழுகும் யாழ் இந்து மகளிரின் வாழ்வில் மட்டுமன்றி எமது பாடசாலையின் வரலாற்றில் எங்களது அதிபர் திருமதி. சரஸ்வதி ஜெயராஜா அம்மையாரினது சேவைகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது.

வானொலி - நாடகக் கலைஞராக ஒலிபரப்புத் துறையில் இணைந்து சாதனை படைத்த எமது கல்லூரியின் பழைய மாணவி செல்வி சற்சொரூபவதி நாதனுக்கு கலாசார அமைச்சு 2008.12.15ஆம் திகதி John de Silva அரங்கில் நடந்த விழாவில் கலாபூஷண விருது வழங்கிக் கௌரவித்தது. அவருக்கு சங்கத்தினராகிய நாம் பாராட்டுத் தெரிவித்து வாழ்த்துவதில் பெருமிதம் அடைகிறோம். (படம் பின் அட்டை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமைமிக்கவர்

திருமதி சரஸ்வதி ஜெயராஜா இந்து மகளிர் கல்லூரியில் அதிபராக கடமையாற்றிய காலம் ஒரு பொற்காலம் என குறிப்பிட முடியும். நான் இப்பாடசாலைக்கு ஆசிரியராக 10.02.1997 கடமையேற்றேன். நான் போனபோது அவர் இருக்கவில்லை. பின்புதான் திணைக்களத்தால் வந்தார். வரும்போது அவரது முகத்தை பார்த்தேன். கடுமையானவர் போல் இருந்தார். எவ்வாறு இங்கு வேலை செய்வது என்று சிந்தித்தேன். பின்பு கடமை நாட்களில் அவருடன் பழகியபோது அவரிடம் இருந்த ஈரம் தெரிந்தது. கனக்கக்கதைக்க மாட்டார். பார்வையாலே அளந்துவிடுவார். ஆசிரியர்களின் கஷ்ட நஷ்டங்களில் பங்குகொண்டார். எப்போதும் சந்தோஷமாக கடமைகளை செய்யக்கூடியதாக இருந்தது. பல தேசியமட்ட பரிசுகளை பெற்றுக்கொண்டோம். பாடசாலையில் நடைபெறும் விழாக்களில் தன் உடம்பைப்பாராது கலந்துகொள்வார். இன்றும் அந்நினைவுகள் ஞாபகமாக இருக்கிறது. விளையாட்டுப்போட்டிக் காலம் ஆஸ்மா இயலாது, ஆயினும் அதற்கான அலுவல்களை இறுதியாக உள்ள கட்டட தாழ்வரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தார். எல்லா நடவடிக்கைகளிலும் தன் நேரடி கண்காணிப்பை வைத்திருந்தார். அவரை நான் ஒரு பல்துறை ஆளுமைமிக்கவ்ராகவே காண்கின்றேன்.

என்னுடைய இன்றைய முன்னேற்றத்திற்கும் அவர் ஒரு கருவியாக ஆரம்பத்தில் செயற்பட்டிருக்கின்றார். அவ்வகையில் அவருக்கு எனது மனம் நிறைந்த நன்றிகள். அவர் ஆற்றிய சேவைக்கேற்ப அவரது பிள்ளைகள் நல்ல நிலையில் இருக்கின்றார்கள். நல்ல ஒரு கணவர் கிடைத்திருக்கின்றார். நல்லதோர் சுற்றம் சூழலை இறைவன் வழங்கியிருக்கிறார்.

"பிறருக்குச் சேவை செய்வதே பிறவி எடுத்ததன் பயன்" என்பார்கள். அதனை அவர் செய்திருக்கிறார் என எண்ணுகின்றேன். தன் ஓய்வுகாலத்தில் தேகாரோக்கியத்துடன், குடும்பத்தினருடன் குதூகலமாக வாழ வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

நன்றி

திருமதி கோதை நகுலராஜா
அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எனது பார்வையில்"

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர்
திருமதி சரஸ்வதி ஜெயராஜ்

புகழ் பூத்த யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கும், மாணவ சமுதாயத்திற்கும் அளப்பரிய சேவையாற்றிய முன்னாள் அதிபர் திருமதி. சரஸ்வதி ஜெயராசாவை இம்மாதம் 9ம் திகதி கோலகலமாக கொண்டாடப்படவிருக்கும் சர்வதேச மகளிர் தினத்தில் சிறந்த பெண்மணியாகத் தெரிவு செய்து எமது பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு கௌரவிப்பது மனப்பூர்வமாக வரவேற்கத்தக்கது எமது சங்கத் தலைவி திருமதி. சிவகாமி அம்பலவாணரையும், மற்றைய செயற்குழு அங்கத்தவர்களையும் நான் மனமாரப் பாராட்டுகின்றேன். திருமதி. சரஸ்வதி ஜெயராசாவின் தலைமைப் பதவிக் காலத்தில் கல்லூரி வளர்ச்சிக்காகவும், மாணவிகளின் முன்னேற்றத்திற்காகவும் அவர் ஆற்றிய அரும் பெரும் பணிகள் பாராட்டுக்குரியது. கல்லூரியின் வரலாற்றில் பொன் எழுத்துக்களினால் பொறிக்கப்பட வேண்டியவை.

திருமதி. சரஸ்வதி ஜெயராசா என்னுடன் பல ஆண்டுகளாக நெருங்கிப் பழகிய ஒரு அன்புச் சகோதரி. என்னை அவர் 'அக்கா' என்றுதான் உரிமையுடன் அழைப்பதுண்டு. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையில் சிறப்புப்பட்டதாரியாக பயின்று வந்த் காலத்திலிருந்து, எமது கல்லூரியின் அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற காலப்பகுதி வரையும் நான் அவருடன் நெருங்கிப் பழகியுள்ளேன். அவரது காலப்பகுதியில் அவர் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்சனைகள், எதிர்ப்புக்கள் யாவற்றையும் நான் நன்கு அறிவேன்.

பல வருடங்களுக்குப் பின், 2004ஆம் ஆண்டு எனது கல்லூரிக்கு சென்ற பொழுது அவரும் அவரது ஆசிரியர்குழாமும் என்னை அன்புடன் வரவேற்று கல்லூரியின் வளர்ச்சி பற்றி விரிவாகக் கூறினார்கள். கல்லூரியின் அபரிமிதமான வளர்ச்சி கண்டு நான் பெருமிதம் அடைந்தேன். அவ்வேளையில் இரு விடயங்கள் என்னை வெகுவாகக் கவர்ந்தன, கல்லூரி வளாகத்திலுள்ள ஒவ்வொரு கட்டிடத்திற்கும் எமது கல்லூரியில் சேவையாற்றிய முன்னாள் அதிபர்களின் பெயர்கள்– Clara Motwani Block, Sarojini Rao Block என்று சூட்டப்பட்டிருந்தமை மகிழ்ச்சியளித்தது. அவர்களின் பெயர்களைக் கண்டதும் அவர்கள் காலத்தில் நான் கல்விகற்ற நாட்களை நினைவுகூர்ந்தேன். அக்காலப்பகுதியை எமது கல்லூரியின் கல்வியில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்காலம் (Renaissance Period) என்று கூறினால் மிகையாகாது. அடுத்ததாக கல்லூரியில் அமைந்திருக்கும் பிள்ளையார் கோவிலை சூழ்ந்துள்ள பரந்த வெளியில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவிகளின் துவிச்சக்கரவண்டிகளை (நூற்றுக்கணக்கான) எவ்வளவு அழகாகவும் ஒழுங்காகவும் வரிசைப்படுத்தி நிறுத்தி வைத்துள்ளதைக் கண்டு நான் வியப்படைந்தேன்.

மாணவிகளுடைய சீருடைகள், சமயப்பற்று, ஒழுக்கம், முறையாக நெறிப்படுத்தப்பட்ட ஒழுங்கான நடைமுறைகள் என்னை மிகவும் கவர்ந்துள்ளன, இவ்வளவு ஆற்றலும், திறமையும் ஒருங்கே அமையப்பெற்ற அதிபர் எமது கல்லூரிக்குக் கிடைத்தமை மாணவர் சமுதாயத்திற்கு ஒரு வரப் பிரசாதமாகும். புத்தகக்கல்வியோடு மட்டுமன்றி, எங்கள்கலை, கலாச்சாரம் பண்பாடு யாவற்றையும் இம்மியளவேனும் பிசகாது வளர்த்து வந்துள்ளார். அதற்கு எடுத்துக்காட்டாக 1999ஆம் ஆண்டு நாட்டுநிலைமை சீராக இல்லாமல் இருந்த காலத்திலும், முப்பந்தைந்து மாணவிகளையும் சில ஆசிரியைகளையும் எங்கள் சங்கத்தின் அனுசரணையுடன் கொழும்புக்கு கூட்டி வந்து கோலாகலமான நாட்டிய நடன நிகழ்ச்சிகளை நடாத்தினார். இப்படியான மாபெரும் கலைநிகழ்ச்சிகயை கொழும்புவாழ் தமிழ் மக்கள் கண்டுகளித்து பேருவகை அடைந்தனர்.

இவ்வளவு மாணவிகளையும் எமது கல்லூரி அதிபரை நம்பி கொழும்புக்கு அனுப்பிவைத்த பெற்றோர்களை நான் பாராட்டுகிறேன். அதிபரின் அபாரதுணிவையும், பொறுப்புணர்ச்சியையும் நாம் எல்லோரும் வியந்து பாராட்டினோம். எமது கல்லூரியை தரம் உயர்த்தி National Level கல்லூரியாக்குவதற்கு அவர் எடுத்துக் கொண்ட விடாமுயற்சியையும் அக்கறையையும் நான் அறிவேன். எமது சங்கத்தின் ஒத்துழைப்புடன் பல உயர் அதிகாரிகளை பலமுறை சந்தித்து தொடர்ந்து போராடி வந்துள்ளார்.

இன்னுமொரு சுவாரஸ்யமான சம்பவத்தையும் கூறுவது பொருத்தமானதாகும். இதன் மூலம் அவருடைய சகிப்புத்தன்மை, தன்னடக்கம் கல்லூரியின் நலனுக்காக எத்துன்பத்தையும் சகித்துக் கொள்ளும் சுபாவம் கொண்டவர் என்பதை அறிந்து கொள்ளலாம். அதிபர் தனது உத்தியோகபூர்வமான கடமைகளை செய்வதற்கு பல்வேறு காரியாலயங்கள், கல்லூரிகளுக்குப் போகவேண்டிய சந்தர்ப்பங்களில் வாகனம் எதுவும் இருக்கவில்லை. துவிச்சக்கரவண்டியில் (அவராக ஓட்டிச் செல்லவில்லை) அல்லது வாடகை முச்சக்கரவண்டியில் தான் பயணஞ் செய்வதுண்டு. மாணவிகளுக்கு சுகயீனம் ஏற்படின் சிகிச்சை நிலையத்திற்கு கொண்டு செல்வதும் சிரமம் ஆகையினால் ஒரு முச்சக்கரவண்டி (Threewheeler) கல்லூரியாக்கு அவசியம் தேவை என கல்வி அதிகாரிகளுக்கு விண்ணப்பித்து பல்வேறு அதிகாரிகள் மூலம் அதனைப் பெறுவதற்கு முயற்சிசெய்து, அவரது விடாமுயற்சியின் விளைவாக ஒரு முச்சக்கரவண்டி கல்லூரிக்கு வழங்கப்பட்டதும் பெருமகிழ்ச்சியுடன், ஒருபென்ஸ் காரே கிடைத்ததுபோல், எனக்குத்தொலைபேசியில் அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கல்லூரியின் அதிபராக இருந்தும், தனது கடமைகளைச் செய்வதற்கு, அவர் எல்லாவிதமான இன்னல்களையும் சிக்கல்களையும் மனந்தளராது எதிர் நோக்கி, சிரித்த முகத்துடன் சமாளித்து, நிர்வாகத்தைத் திறம்படச் செய்தார்.

கல்லூரி அதிபராக மட்டுமன்றி ஒரு சிறந்த இல்லத்தரசியாகவும் வியங்கினார். விருந்தோம்பலுக்கு அவருக்கு நிகர் அவரேதான். இவரின் வெற்றிக்குப் பின்னால் அவரது அன்புக் கணவர் திரு. ஜெயராசா அவர்கள் உறுதுணையாக இருந்துள்ளார் என்பதில் ஐயமே இல்லை. தங்களது நான்கு பிள்ளைகளையும் நல்வழிப்படுத்தி, சிறந்தமுறையில் கல்வி புகட்டி, அவர்களை நல்ல பிரஜைகளாக உருவாக்கியுள்ளனர். திருமதி. சரஸ்வதி ஜெயராசா ஓய்வு பெற்ற பின்பும் தனது சமூகப்பணிகளைத் தொடர வேண்டும் அவருக்கு நீண்டஆயுள், நல்ல தேகாரோக்கியம், மனநிம்மதியையும் எல்லாம் வல்ல இறைவன் வழங்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

திருமதி. தயாநிதி செல்வநாயகம்

பக்கம் 15

4. நீங்கள் பார்க்கும் வேலை உங்களுக்கு சந்தோஷத்தை தருகிறதா?
அ. ஆமாம் ஆ. பெரும்பாலான நேரங்களில் இ. இல்லை

5. உங்களுக்கு நெருங்கிய நண்பர்கள் எத்தனை பேர்?

அ. யாரும் இல்லை, அல்லது ஒருவர் ஆ. இரண்டிலிருந்து ஐந்து இ. குறைந்தது ஆறு பேர்

6. உங்களை பாதிக்கிற விஷயம் ஏதாவது நடந்தால் நீங்கள்.......?
அ. முடிந்த அளவுக்கு சமாளிப்பேன். ஆ. வாழ்க்கையில் இதெல்லாம் சகஜம் என்று தோள்களைக் குலுக்கிக் கொண்டுபோய் விடுவீர்கள். இ. அதையே ஒரு சவாலாக எடுத்துக் கொள்வீர்கள்.

7. குடும்ப வாழ்க்கை என்பது......?
அ. ரொம்ப போர் ஆ. பல நேரங்களில் அற்புதமாகத்தான் இருக்கிறது. இ. பிரமாதம் அடிக்கடி விவாதங்கள் என்றாலும், விட்டுக்கொடுத்து போவதிலும் ஒரு சுகம்

8. உங்களிடம் போதிய அளவு பணம் இருக்கிறதா?

அ. இருக்கிறது, இன்னும் இருந்தால் நன்றாக இருக்கும். ஆ. போதாது தான் இ. மற்றவர்களோடு ஒப்பிடும் போது குறைவு தான்.

9. உங்களுடைய வாழ்க்கை......
அ. கிடைத்தற்கரியது. ஆ. நீங்கள் ஏங்கிய அதே வாழ்க்கை. இ. விதித்தது அவ்வளவுதான்.

10. உங்களை பொறுத்தவரை மிக முக்கியமான விஷயம்?
அ. பணம் ஆ. சந்தோஷம். இ. ஆரோக்கியம்.

உங்கள் பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 10 | 0 | 5 | 2. | 5 | 10 | 0 | 3. | 5 | 10 | 0 |
| 4. | 10 | 5 | 0 | 5. | 0 | 5 | 10 | 6. | 5 | 0 | 10 |
| 7. | 0 | 5 | 10 | 8. | 10 | 5 | 0 | 9. | 10 | 5 | 0 |
| | | | | 10. | 0 | 10 | 5 | | | | |

பக்கம் 38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜ் அவர்களின்

## ஏற்புரை

பேரன்புக்கும், மதிப்புக்குமுரிய சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்களே, உபதலைவிகளான திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்களே, செல்வி சற்சொரூபவதி நாதன் அவர்களே, இராமநாதன் மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி கோதை நகுலராசா அவர்களே, யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான திருமதி ஷர்மினி பிரேந்திரன் அவர்களே, சஞ்சிகையை வெளியிட்டுவைக்க வருகை தந்துள்ள திருமதி வனஜா தவயோகராஜா அவர்களே, திருவாளர் கயிலாசபிள்ளை அவர்களே, சங்க உறுப்பினர்களே, வருகை தந்திருக்கும் ஏனைய ஆர்வலர்களே உங்கள் அனைவருக்கும் எனது மாலை வணக்கத்தைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், கொழும்பு, சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடும் இந்நாளில் என்னைக் கௌரவித்து விழாவெடுக்கும் அவர்களின் பெருந்தன்மையை மதிப்பதுடன் எனது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். நான் 1993ஆம் ஆண்டு கல்லூரியின் அதிபராகக் கடமையேற்ற காலத்தில், அவ்வாண்டு உருவாகியிருந்த இச்சங்கம், எனது பதவிக்காலத்தில் பக்கபலமாக இருந்து தனது நேசக்கரத்தை நீட்டிக்கல்லூரியை வளர்த்தெடுப்பதில் பெரும்பங்காற்றியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதில் பெருமையடைகிறேன். நான் பதவியிலிருந்த பொழுது, கல்லூரியின் மேடைக்குத் திரைச்சேலை யொன்று வேண்டுமென்று கேட்டபொழுது அதனை நிறைவேற்றுவதாகக் கூறிய சங்கத்தினர் பல இலட்சம் ரூபா செலவில் தற்பொழுது அதனைக் கொடுத்துள்ளனர். அதற்காக எனது சார்பிலும், கல்லூரியின் சார்பிலும், யாழ். கல்வித்திணைக்களத்தின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களது கல்லூரிப்பற்றையும், அன்பையும், அர்ப்பணிப்பையும் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் உணர்ந்து நன்றியுள்ளவர்களாக இருப்பதே உங்களுக்கு அவர்கள் செய்யும் கைமாறாகும்.

எனது காலத்தில் கல்லூரி பல வழிகளிலும் சிறப்படைந்து உயர்வடைந்ததெனக் கூறினீர்கள். பல கஷ்டங்களின் மத்தியில் தத்தளித்த கல்லூரியை உயர்த்துவதற்கு பக்கபலமாகவிருந்து முதலில் உதவியவர்கள் கொழும்புச்சங்கத்தினர் என்றால் மிகையாகாது. கல்லூரிக்குத் தேவையான சகல பொருட்களையும் அவ்வப்போது தந்துதவி கல்வி வளர்ச்சிக்குப் பணியாற்றினீர்கள். கொழும்பு, அவுஸ்திரேலியா, கனடா, பழைய மாணவர் சங்கங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், கல்வித்திணைக்களத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய அனைவரும் தந்த ஒத்துழைப்பும் அதனால் ஏற்பட்ட கூட்டு முயற்சியுமே கல்லூரி வளர்ச்சியடைவதற்குக் காரணமாக இருந்தது. எந்தவொரு பிரிவினையுமற்ற அன்பான ஆசிரியர் குழாமும் பண்பான மாணவிகளும் கல்லூரி நிகழ்ச்சிகளையெல்லாம் எந்தவொரு தளர்வுமில்லாமல் நடாத்துவதற்கு பெரும்பங்காற்றி நடாத்தி வந்தனர்.

கொழும்பு பழைய மாணவிகள் சங்கத்தினருடன் சகோதரப்பற்றுடன் தொடர்பு கொண்டு எக்கருமத்தையும் செய்யக்கூடியதாக இருந்தது. திருமதி அபிராமி கயிலாசபிள்ளை, திருமதி சிவகாமி அம்பலவாணர், செல்வி சற்சொரூபவதி நாதன், திருமதி தயாநிதி செல்வநாயகம் ஆகியோருடன் தேவைப்பட்ட பொழுதெல்லாம் தொடர்பு கொண்டு ஆலோசனைகளையும், உதவியையும் பெற்றுப்பணியாற்ற முடிந்தது. சங்கத்தின் மும்மூர்த்திகள் போல் விளங்கியவர்கள் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை, திருமதி சிவகாமி அம்பலவாணர், செல்வி சற்சொரூபவதி நாதன் அவர்கள். இவர்கள் எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியில் சங்கத்தின் வளர்ச்சிக்கும், செயற்பாட்டுக்கும் பங்களிப்புச் செய்துள்ளனர். இவர்களுக்குப் பக்கபலமாக ஏனைய உறுப்பினர்கள் இருந்து உதவி வந்துள்ளீர்கள். எந்தவொரு செயலைச் செய்யும் பொழுதும் குறைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டி வரும். அவற்றை யெல்லாம் பொருட்படுத்தாது பெருந்தன்மையுடன் கல்லூரிக்காகப் பாடுபட்ட உங்களுக்கு நிகர் நீங்களே தான்.

திருவாளர் கயிலாசபிள்ளை அவர்களும், திருவாளர் அம்பலவாணர் அவர்களும் சகோதரர்களாக இருந்தமையும், இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களாக இருந்தமையும், தமது சகோதரிப் பாடசாலையை நேசித்தமையும் இந்துப் பண்பாட்டை மதித்தவர்களாக இருந்தமையும் கல்லூரிக்குக் கிடைத்த கொடையென்றே கூறலாம். திருவாளர் அம்பலவாணர் அவர்கள் A9 பாதையூடாக எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியில் இயலாமையுடன் கல்லூரிக்குப் பொருட்களையெல்லாம் எடுத்து வந்தமை இன்றும் என் மனக்கண்முன் நிற்கிறது. இப்படியான ஒருவிழா அவருக்கு எடுப்பதே பொருத்தமானது. வருங்காலத்தில் அவருக்கு ஒருவிழா எடுத்தால் அதில் நானும் பங்குகொள்வேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று நீங்கள் எனக்குத் தரும் இந்தக் கௌரவத்தை மானசீகமாகத் திருவாளர் அம்பலவாணர் அவர்களுக்குச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். கல்லூரியின் கணணி அறையைப் பார்வையிட்ட பொழுது திருவாளர் கயிலாசபிள்ளை அவர்கள் கூறிய வாசகம் இப்பொழுதும் எனது ஞாபகத்தில் வருகிறது. "கல்லூரியில் கணணி அறிவையும் ஆங்கிலக் கல்வியையும் வளர்ப்பதற்கு என்ன உதவி தேவையோ அதனை நான் தருவேன். தயங்காமல் செய்யுங்கள்" என்றார். இந்தப் பெருந்தன்மை யாருக்கு வரும்.

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்கள் கல்லூரிக்கு ஒரு ஓகன் வாத்தியக்கருவியை 60,000 ரூபா செலவில் வாங்கித் தந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரமல்லாமல், கோவிலுக்கு ஏறக்குறைய 150,000 ரூபா செலவில் மாபிள் பதித்தும் தூய்மைப்படுத்தினார். 1999ஆம் – 2003ஆம் ஆண்டுகளில் மாணவர்களை இங்கு அழைத்துக் கலை நிகழ்ச்சியை நடாத்திய செயல் இன்னும் என் மனக்கண் முன் நிற்கின்றது. அன்று இராமகிருஷ்ண மண்டபத்தில் பழைய மாணவிகள் அனைவரும் உற்சாகத்துடனும், பாசத்துடனும் நேசக்கரம் நீட்டி அனைவரையும் வரவேற்று, அரவணைத்து, உணவு கொண்டு வந்து தந்து உங்கள் அன்பில் திளைக்க வைத்தீர்கள். அன்று உங்களைப் பார்த்த இளமைத் தோற்றத்தையும் இன்று நிங்கள் முதுமையடைந்த தோற்றத்தில் இருப்பதையும் பார்க்கும்பொழுது மனம் வேதனையடைகிறது. முதுமையடைந்தாலும் உங்கள் அனைவரிடமும் குடிகொண்டிருக்கும் கல்லூரியின் பற்றும், பாசமும் என்றும் இளமைத்துடிப்புடனே இருப்பது பெருமைப்படக்கூடிய விடயமாகும். சென்ற மாதம் நடந்த உங்கள் பொதுக்கூட்டத்திலும் திருமதி கனகசபை என்னும் பழைய மாணவி இயலாமை மத்தியிலும் வருகை தந்திருந்தமை என்னை வியக்கவைத்தது. வருங்காலச் சந்ததியினர் உங்களைப் போல் இருப்பார்களென்பது கேள்விக்குறிதான்.

யாழ்ப்பாணத்திலுள்ள எந்தவொரு பெண்கள் பாடசாலைக்கும் இப்படியான ஒரு பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக்கிளை செயற்படவில்லையென்று பலரும் கூறினர். அந்தளவுக்கு உங்களின் செயற்பாடு இருந்ததுடன், எனது 13 வருட பதவிக் காலத்தில் உங்கள் மூலமாகக் கல்லூரியை வளர்த்தெடுக்க முடிந்தமை இறைவன் எனக்குத்தந்த ஒரு பக்கபலமென்று கூறுவதில் பெருமையடைகின்றேன். அவுஸ்திரேலியா, கனடாச் சங்கங்களையும் தொடர்புபடுத்திக் கல்லூரியை வளர்ப்பதில் நாம் அனைவரும் வெற்றிகண்டோம்.

இன்றைய நிகழ்வு எனக்கு இன்னொரு விதத்திலும் மகிழ்ச்சியை அளிக்கிறது. எமது கல்லூரியிலிருந்து முதன் முறையாக சட்டத்துறைக்குச் சென்று பட்டம் பெற்ற மாணவி திருமதி ஷர்மினி பிரேந்திரன் இங்கு வந்துள்ளார். கல்லூரியில் ஆசிரியராக இருந்த திருமதி கோதை நகுலராசா அவர்கள் கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரியின் அதிபராக இங்கு வருகை தந்துள்ளார். இவர்கள் மேன்மேலும் உயர்வடைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

அன்பார்ந்த சங்க உறுப்பினாகளே, உங்கள் சேவைக்கும், அன்புக்கும் தலைவணங்குவதுடன், உங்கள் செயற்பாடுகள் அனைத்துக்கும் கல்லூரியின் சாா்பிலும் என் சாா்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னைக் கௌரவித்து, அன்பளிப்பையும் தந்து விழாவெடுத்தமைக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் அனைவரும் நீண்ட ஆயுளுடன், நல்ல சுகத்துடன் வாழவேண்டும்மென இறைவனை வேண்டுகிறேன். மீண்டும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி. வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்-கொழும்பு, ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வில் இரத்மலானை இந்துக் கல்லூரி சக்தி இல்ல மாணவிகள் பாடிய பாடல்கள்.

# பெண்மை வாழ்க

பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா!
பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா!
தண்மை இன்பம்நற் புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பேரும் ஸதியென்ற நாமமும். 1

அன்பு வாழ்கென் றமைதியில் ஆடுவோம்.
ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்;
துன்பம் தீர்வது பெண்மை யினாலடா –
சூரப் பிள்ளைகள் தாயென்று போற்றுவோம்! 2

வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா –
மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்!
கலிய ழிப்பது பெண்க ளறமடா –
கைகள் கோர்த்துக் களித்துநின் றாடுவோம்! 3

பெண்ண றத்தினை ஆண்மக்கள் வீரந்தான்
பேணு மாயின் பிறகொரு தாழ்வில்லை
கண்ணைக் காக்கும் இரண்டிமை போலவே
காதலின்பத்தைக் காத்திடு வோமடா! 4

சக்தியென்ற மதுவையுண் போமடா!
தாளங் கொட்டித் திசைகள் அதிரவே –
ஒத்தி. யல்வதொர் பாட்டும் குழல்களும்
ஊர்வியக்கக் களித்து நின்றாடுவோம்! 5

உயிரைக் காக்கும்; உயிரினைச் சேர்த்திடும்;
உயிரினுக் குயிராய் இன்ப மாகிடும்;
உயிரினும் இந்தப் பெண்மை இனிதடா –
ஊது கொம்புகள், ஆடு களிகொண்டே! 6

"போற்றி தாய்" என்று தோள்கொட்டியாடுவீர் –
புகழ்ச்சி கூறுவீர் காதல் கிளிகட்கே!
நூற்றி ரண்டு மலைகளைச் சாடுவோம் –
நுண்ணிடைப்பெண் ணொருத்தி பணியிலே! 7

"போற்றி தாய்" என்று தாளங்கள் கொட்டடா!
"போற்றி தாய்" என்று பொற்குழ லூதடா!
காற்றி லேறியவ் விண்ணையுஞ் சாடுவோம்
காதல் பெண்கள் கடைக்கண் பணியிலே! 8

அன்ன மூட்டிய தெய்வ மணிக்கையின்
ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்;
கன்னத்தே முத்தம் கொண்டு களிப்பினும்
கையைத் தள்ளும் பொற்கைகளைப் பாடுவோம்! 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் விடுதலைக் கும்மி

காப்பு

பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
பேசிக் களிப்பொடு நாம்பாடக்
கண்களிலே யொளி போலவுயிரில்
கலந்தொளிர் தெய்வம் நற் காப்பாமே.

கும்மியடி! தமிழ்நாடு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின –
நன்மை கண்டோ மென்று கும்மியடி! (கும்மி) 1

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்;
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார். (கும்மி) 2

மாட்டையடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே
வீட்டினில் எம்மிடங் காட்ட வந்தார் – அதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி! (கும்மி) 3

நல்ல விலைகொண்டு நாயை விற்பார், அந்த
நாயிடம் யோசனை கேட்ப துண்டோ?
கொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத்தார் – பழிகூட்டி விட்டார். (கும்மி) 4

கற்புநிலை யென்று சொல்ல வந்தால் – இரு
கட்சிக்கு அஃது பொதுவில் வைப்போம்;
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (கும்மி) 5

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுக் கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி. (கும்மி) 6

வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோ மென்று கும்மியடி;
சாதம் படைக்கவும் செய்திடுவோம் – தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம். (கும்மி) 7

காத லொருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து,
மாத ரறங்கள் பழைமையைக் காட்டிலும்
மாட்சி பெறச்செய்து வாழ்வமடி! (கும்மி) 8

– மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கோவிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்

(ஆன்மீகம்)

ஓடி ஓடிப் பொருள் தேடிக் குவித்தவனும் உலகத்தை யெல்லாம் வென்றவனும், தன் ஆட்சியின் கீழக்கொண்டு வந்தவனும், இன்னும் ஒருவன் வாழ்க்கையில் முன்னேற்ற மடைந்தவனாயினும் சரி தன் வாழ்நாளின் இறுதிப் பகுதியில் மனதில் அமைதியை நாடி ஆன்மிக சிந்தனைக்கு வந்தே தீரவேண்டும்.

அப்படி ஆன்மிக சிந்தனைக்கு வராதவன் மனித மிருகமாகவோ அல்லது உயிரும் உணர்ச்சியும் இல்லாத வெறும் ஜடமாகவே இருக்க வேண்டும்.

மனித பண்பின் அடிப்படையே மதத்தில் தான் அறிமுகமாகிறது. ஆரம்பம் ஆகிறது என்று சொல்லாலாம். மனிதனை மனிதனாக மதிக்க வேண்டும். பண்பு மற்றவர் எல்லோரையும் தனக்கு சரி சமமாக நினைக்கும் மனப்பான்மை, அன்பு, சகோதரத்துவம், சகிப்புத்தன்மை, எவரிடத்தும் வெறுப்போ, பகையோ, கோபமோ கொள்ளாமல் இனிய சொல் சாந்த சுபாவம் இவை எல்லாவற்றுக்கும் ஆதாரமாக விளங்குவது மதம் (சமயம்) தான்.

ஆனால் இன்றைக்கு மதத்தின் பெயரால் போர்களையும், இனப்படுகொலைகளையும் பார்க்கிறோம். இது தவிர்க்கப்பட வேண்டும். அவற்றிக்கும் மதத்திற்கும் எந்தவித சம்பந்தமுமில்லை. பாரத மக்கள் பண்புடையவர்கள், எல்லோரையும் நேசிப்பவர்கள், நல்ல எண்ணம் கொண்டவர்கள். அதற்கு பாரத தேசம் எங்கும் பரவிக்கிடக்கும் ஆலயங்களே சான்று.

**"கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்"**

திருமதி. ஞானேஸ்வரி ஞானசேகரம்
இலக்கியக் குழு
பழைய மாணவர் சங்கம். கொழும்பு

**கண்ணீர் அஞ்சலி** – 'யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் – கொழும்பு' நிர்வாகக்குழு அங்கத்தவரான திருமதி ருக்மணி அரசரத்தினத்தின் அன்புக் கணவர் திரு அரசரத்தினம் அவர்கள் 21.01.2009 அன்று கொழும்பில் காலமானார். அன்னாரின் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் சங்க உறுப்பினர்கள் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

தென் இந்தியாவில் உள்ள சிவஷேத்திரங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்தது 'ஸ்ரீசைலம்'. ஸ்ரீசைலம் என்பதற்கு திருமலை என்று தான் பொருள். வெங்கடவன் எழுந்தருளியிருக்கும் திருப்பதி திருமலையைப் போல் வத நாயகன் முக்கண் பெருமாள் (சிவபெருமான்) எழுந்தருளியுள்ள ஸ்ரீசைலம் சிறப்பும், பெருமையும் நாள் தோறும் பக்தர்களை கவர்ந்து இழுக்கும் தன்மை கொண்டது.

சிவன் அமர்ந்த மலைப்பகுதியாம் ஸ்ரீசைலத்திலும் பற்பல தீர்த்தங்களும் பார்க்க வேண்டிய அற்புதங்களும் மலிந்து கிடக்கின்றன இங்கே எழுந்தருளிய பகவான் மல்லிகார்ஜுன் ராவ் சுவாமியும் அம்பாள் பிரம்மராம்பா தேவியும் சக்திவாய்ந்த தெய்வங்கள் நினைத்தவுடனே சகல பாவங்களையும் நாசம் செய்து முக்தி அளிக்கக்கூடிய ஷேத்திரம் இந்த ஸ்தலம் வடக்கே இமயமலையிலுள்ள கேதார்நாத் ஷேத்திரம் போல் மிகவும் பிரசித்தியும், மகிமையும் வாய்ந்தது ஸ்ரீசைலம். இந்தியாநாடு முழுவதும் ஆங்காங்கே உள்ள பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களில் இந்த ஸ்தலத்திலுள்ளதும் ஒன்றாகும்.

# ஸ்ரீ சைலத்தின் பெருமை

பஸ் செல்லும் பாதைகளும் மலைப்பாதைகளாகவே இருக்கின்றன. இந்த மலைப்பாதைகளும் மிகவும் இரம்யமானவை. இம் மலைகளுக்கிடையே கிருஷ்ணாநதி பாய்ந்து செல்வதால் இந்த ஸ்தலத்திற்குச் செல்பவர்கள் அற்புதமான காட்சிகளை கண்டுகளித்தபடியே செல்லலாம்.

ஸ்ரீசைலம் மலைப்பகுதி ஒங்கோல் மாவட்டம் மார்க்காபுரம் தாலுகாவிலிருந்து 50 கி.மீ தூரத்திலுள்ளது. இப்பாதையில் அணைக்கட்டு நீர் மின்வெட்டு உற்பத்தி நிலையம், கிருஷ்ணாநதி, விஷ்ணுகிரி, பிரம்மகிரி, ஆகிய ஊர்களுக்குச் செல்கிறது. கிருஷ்ணாநதியைக் கடப்பதற்கு மிகவும் பெரிய பாலம் கட்டப்பட்டுள்ளது. அதே மலைப்பகுதி வடக்காகச் செல்கிறது. மெகபூப் நகர் மாவட்டம் அச்சம்போட்டா என்ற ஊருக்குச் செல்கிறது.

ஸ்ரீசைலம் மலைப்பகுதியில் ஆந்திரா நாட்டின் மையப்பகுதியில் அமைந்திருக்கின்றன. கிழக்கே வங்காளம், ஒரிசா மாவட்டம் முதல் ஆந்திரா கர்நாடகா தமிழ்நாடு வரை சங்கிலித்தொடர் போல் நீண்டிருக்கும் இம்மலைகளின் மையப்பகுதி மலைகள் மிகவும் அடர்த்தியாகவுள்ளன. இம்மலைகளை பூலோக கைலாயம் என்றும் சொல்லப்படுகிறது. கிருஷ்ணாநதியில் நீராடி ஸ்ரீசைல நாதராகிய மல்லிகார்ச்சுன சுவாமியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மராம்பா தேவியையும் தரிசிப்பவர்களுக்கு மறு ஜென்மம் கிடையாது என்று புராணங்கள் கூறுகின்றன.

இந்த ஸ்தலம் ஆந்திரா நாட்டின் மையப்பகுதியில் அமைந்திருப்பதால் நான்கு பக்கங்களிலிருந்தும் ஒரிசா, கர்நாடகம், தமிழ்நாடு, மகராஷ்டிரா, ரா ஜஸ்தான் மாநிலங்களால் சூழப்பட்டு இருப்பதால் எல்லா நாட்டவரும் வருஷம் முழுவதும் வந்து போய்க் கொண்டே இருக்கிறார்கள்.

பெங்களூரையும் ஹைதராபாத்தையும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை தும்பூர், அனந்தபுரம், கர்நூல், மகபூப்நகா ஆகிய நகரங்கள் வழியாக செல்வதால் சுற்று உலா ஊர்தி வழியாக வந்து கொண்டே இருக்கின்றன. நாகர்ச்சுன சாகரிலிருந்து கிருஷ்ணாநதியின் மூலமாக விசைப்படகுகள் வந்து போகின்றன. ஸ்ரீசைலம் அணைக்கட்டின் பக்கம் உள்ள விஷ்ணுகிரியில் சிறிய விமானங்கள் இறங்கக்கூடிய விமான நிலையம் ஒன்றும் உள்ளது. எனவே நீர் நிலம் ஆகாயம் மூன்று மார்க்கங்களாலும் பக்தர்கள் செல்லலாம். புகையிரதப்பாதை போடும் திட்டமும் நிறைவேற உள்ளது.

ஆனபடியால் சகல வழிகளாலும் சிவ பெருமானையும் (மல்லிகார்ச்ஜுன் பகவானையும்) பிராட்டியார் பிரம்மராம்பா தேவியையும் கண்டு களிக்க பக்தர்கள் பல்லாயிரக் கணக்கானோர் இங்கு வருகை தருகிறார்கள். அவற்றைக்கண்டு தரிசிப்பவர்களுக்கு மறு ஜென்மம் கிடையாது என்பது ஒரு ஐதீகம்.

திருமதி. ஞானேஸ்வரி ஞானசேகரம்
இலக்கியக் குழு பழைய மாணவர் சங்கம். கொழும்பு

---

படித்ததும் பிடித்ததும்

ஒளிவு மறைவின்றி (டயார்)

ஒரு பெண்மணி, முதலீடு எதுவுமின்றியும் வேலை எதுவும் செய்யாமலும் வீட்டில் இருந்தவாறே தாராளமாகச் சம்பாதிக்கிறார்.

இத்தகவலை தெரிவித்த நண்பரிடம் அது எப்படிச் சாத்தியமாகும்? என்று நான் கேட்டேன்.

அவர் சொன்ன விபரம் சுவாரஸ்யமாக இருந்தது.

வெளி மாவட்டங்களிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் பலர், நம்பிக்கையின் நிமித்தம் இந்தப் பெண்மணிக்கு பணம் அனுப்பி வைக்கிறார்கள். தங்களின் உறவுகளுக்கு நேரில் வழங்குவதற்காகவும் அனுப்பி வைப்பதற்காகவுமே பணம் இவருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

இவர் சாவகாசமாக இப்பணத்கை பரிவர்த்தனை செய்யலாம். அவசரமாக எவருக்கும் பணம் தேவைப்படின் கைமாற்றாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

பணம் அனுப்புபவர்கள் இவரின் சேவைக்காக ஒரு கமிஷனும் கொடுக்கிறார்கள். ஆகவே, தாராளமாகப் பணம் புரள்வதுடன் இவரின் செலவுகளையும் சிரமமின்றி ஈடுசெய்து கொள்ளுகிறாராம்.

நம்பிக்கை, நாணயம் தருகிறது!

நன்றி – தினக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

செல்வத்துள் சிறந்த செல்வம்

## (1) குழந்தை கிடைத்தது

நடராஜன் மனித சஞ்சாரம் இல்லாத அடர்ந்த காட்டில் வாழ்ந்து வந்தார். இவர் உணவு விடுதி வைத்து நடத்தினார். இரவு 11 மணிக்கு திறப்பார். விடியற்காலை 3 மணிக்கு விடுதியை மூடிவிடுவார். இரவிலே களவு செய்து எடுத்து போகின்ற கள்வர்கள் ஒன்றுக்கு பத்தாக விலை கொடுத்து வாங்கி உண்பார்கள். திருடர்களுக்குப் பாடுபடாமல் பணம் வருவதால், பணத்தின் அருமை தெரியாது. ஒரு இட்டிலி 5 ரூபாய், வடை 3 ரூபாய், தோசை 7 ரூபாய், அதிரசம் 15 ரூபாய், வெற்றிலை பாக்கு, பீடி சிகரெட்டு இவைகளுக்கு நடராஜன் சொன்னதுதான் விலை.

ஓரிரவில் 400 ரூபாய், 500 ரூபாய் என்று விற்பனை ஆகும். நடராஜன் லட்சாதிபதியாக வாழ்ந்து வந்தார். அவருக்கு குழந்தை இல்லை. அவரின் மனைவி மாலாவுக்கு குழந்தை இல்லையே என்ற தாபமும், வருத்தமும் மிகுதியாக இருந்தன. குழந்தைச் செல்வம் இறைவன் கொடுத்தால்தான் பெற முடியும்.

அதே கானகத்தில் கருப்பன் என்ற வேடன் வாழ்ந்து வந்தான். அவன் முரடனாக இருந்தாலும், தன் மனைவி பேச்சியிடமும், குழந்தையிடமும் மிகவும் அன்பாக இருந்தான். ஒரு நாள் . கருப்பனுக்கு விஷகாய்ச்சல் வந்து இறந்துவிட்டான். பேச்சி கருப்பனின் பிரிவை தாங்கமாட்டாது, தன் உயிரையும் மாய்த்துக் கொண்டாள். தாய் தந்தையரை இழந்த அந்த ஆறு மாதக் குழந்தை பதறிப் பதறி அழுது கொண்டிருந்தது. வழக்கம்போல் கானகத்தில் நடந்த நடராஜனின் காதுகளில் அக்குழந்தையின் அழும் குரல் கேட்டது. அவன் அழும் குரல் கேட்ட திக்கில் விரைந்து சென்று அக்குழந்தையை மிகுந்த கருணையுடன் எடுத்து, கண்ணீரைத் துடைத்து, முகத்தோடு முகம் சேர்த்து முத்தமிட்டு குழந்தையை கொண்டுபோய் மாலாவிடம் கொடுத்தார். அவள் அக்குழந்தையை அருமையிலும் அருமையாக தாலாட்டி சீராட்டி வளர்த்தாள். அந்த ஆண்மகவுக்கு 'கணபதி' என்று பெயர் சூட்டினார்கள்.

அவன் பள்ளிப்பருவம் அடைந்ததும் அருகில் இருந்த ஊரான தூத்துக்குடியில் வந்து வசித்தார்கள். அவனைப் பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தார்கள். அவனும் அக்கறையாகப் படித்து, வகுப்பில் முதல் மாணவனாகத் தேறி, தாய் தந்தையரை மகிழ வைத்தான். அவனைச் செல்லமாக வளர்த்ததால் சில சமயங்களில் மிகவும் அடம்பிடித்து முரண்டு பண்ணுவான். தெருவில் போகின்ற பிள்ளைகளை அடிப்பான். இதனால் பெற்றோருக்கு சிலவேளைகளில் மிகவும் தர்ம சங்கடமான நிலைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டதுண்டு. நடராஜன் தனது தொழிலை தொடர்ந்து நடாத்தி வந்தார்.

(2) திரை கடல்

கணபதி பெரியவனானதும், அவனுக்கு திருமணம் செய்து வைக்க பெற்றோர்கள் விரும்பினார்கள். நடராஜனும் பெண் தேடும் முயற்சியில் ஈடுபட்டார். கணபதி காட்டில் கிடைத்த அனாதைப் பிள்ளை என்பதால் அவனுக்குப் பெண் கொடுப்பதற்கு எல்லோரும் பின்வாங்கினார்கள். இந்தக் கவலையில் நடராஜனும் சிவபதம் அடைந்துவிட்டார். கணபதி தந்தையாருடைய இறுதிக்கிரியைகளைச் செய்து முடித்தான். அதன்பின் அவன் தனிமையில் சிந்தித்தான்: "நமது தந்தையார் செய்த வியாபாரம் நல்லதன்று. கள்ளர்களுக்கு உதவி செய்ததாகும். நடுக்காட்டில் நள்ளிரவில் கள்ளர்களுக்காக உணவு விடுதி நடத்தியது பெருந்தன்மையாகாது. நாம் கப்பல் வியாபாரம் செய்ய வேண்டும். அதுதான் கண்ணியமாக இருக்கும்" என்று நினைத்து. தனது முடிவை தாயாரிடம் கூறினான். மாலாவும் அதை ஏற்று அவனை உற்சாகப்படுத்தினாள்.

கணபதியும் பல ஆயிரங்கள் செலவழித்து கப்பல் செய்தான். அதில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு, தாயாரை வணங்கி அவளின் ஆசிர்வாதத்தைப் பெற்றுக் கொண்டு, அவளிடம் விடைபெற்று தன் பரிஜனங்களுடன் கப்பலேறிப் புறப்பட்டான். நான்கு நாள் சீராக கப்பல் கடலில் ஓடியது. ஐந்தாம் நாள் அக்கப்பல் கடலுக்கு நடுவிலுள்ள மலையில் தரைதட்டி நின்று விட்டது.

கணபதி என்ன செய்வதென்று அறியாமல் கதிகலங்கி, மதிகலங்கி நின்றான். அப்பொழுது ஒரு பெரிய கப்பல் வருவதை கண்டு கணபதி சிவப்பு அபாயக் கொடியைக் காட்டினான். சிவப்புக்கொடி அசைவதைப் பாாத்த அந்தக்கப்பல் தலைவன் படகில் ஏறிவந்து கணபதியிடம் நிலைமையை விசாரித்து அறிந்து கொண்டான். "அன்பனே! பாரம் இருந்தால் கப்பலை எடுக்க முடியாது. கப்பலில் உள்ள எல்லாச் சரக்குகளையும் கடலில் கொட்டிவிட்டு, காலிக் கப்பலாகச் செய்துவிடு, நான் உன் கப்பலைக் கடலில் இழுத்து விடுவேன்" என்றான். கணபதி தனக்கு நேர்ந்த கதியை நினைத்து மிகவும் வருந்தினான். வேறு வழியின்றிக் கப்பலில் இருந்த எல்லாச் சரக்குகளையும் கடலில் கொட்டிவிட்டான். திருடர்களுக்கு உணவு செய்து வந்த வருவாய் கடலில் மூழ்கியது. 'அறவழியில் வந்த செல்வம்தான் நிலைத்து நிற்கும்; தீயவழியில் வந்த செல்வம் நிலைக்காது' என்பதை இதனால் அறிந்து கொள்ளலாம்.

கப்பல் தலைவன் கணபதியின் கப்பலைச் சங்கிலியினால் கட்டி நடுக்கடலில் இழுத்து விட்டான். "அன்பனே! கப்பலில் பாரம் இல்லையானால் கப்பல் நடுக்கடலில் இடர்ப்படும். ஆதலால் பாரத்தை நிறைத்துக் கப்பலை ஓட்டித் தாயகம் போய்ச் சேர்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுச் சென்றான்.

கணபதிக்கு ஒன்றும் புரியவில்லை. நடுக்கடலில் கப்பலில் என்ன பாரத்தை இடுவது? நாம் கப்பல் வியாபாரம் செய்தது மடத்தனம் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்து ஆழ்ந்து சிந்தித்தான். 'அதோ தெரிகின்ற மலையிலுள்ள கற்களையும், மணலையும் இட்டு நிரப்பி ஊர் போய்ச் சேருவோம்' என்று நினைத்து கப்பலை நங்கூரம் போட்டு நிறுத்தி விட்டு, படகில் ஏறி அந்த மலையை அணுகினான்.

## (3) திருமணம்

அந்த மலை வானளாவிய தருக்களும், மரகதக் கம்பளம் விரித்தது போன்ற புல் தரைகளும், பல வண்ணத்துடன் கூடியமலர்ச் செடி கொடிகளும், பழுத்துக் குலுங்கும் மரங்களும், தண்ணென்று வீசும் காற்றும் நறுமணமும், துள்ளிக் குதிக்கும் புள்ளிமான் கூட்டங்களும் நிறைந்து, இயற்கை அன்னையே வந்து கொலு வீற்றிருப்பது போல் காட்சியளித்துக் கொண்டிருந்தது. அந்த இயற்கை எழிலைக் கண்டு கணபதியின் சிந்தையில் மகிழ்ச்சி பொங்கியது.

அந்த மலையில் சிறிது தூரம் நடந்து சென்றான். அங்கு சிற்றோடை ஒன்று சலசல என்று ஓடிக்கொண்டிருந்தது. அதன் கரையில் அழகுத் தெய்வம் போல் இளம் பெண்மணி ஒருவர் கீரை பறித்துக் கொண்டிருந்தாள். அந்த அழகிய பெண்மணியைக் கண்டு இளைஞனாகிய கணபதி, மதுவுண்ட வண்டு போல் மயங்கி நின்றான். "இவள் என்ன திருமகளோ! திருமகளின் மருமகளோ! சசி தேவியோ! ரதி மடந்தையோ! இப்படி ஓர் அழகிய பெண்மணியை நான் இதுவரை கண்டேன் இல்லை. கப்பல் தரைதட்டி நின்றதும் நன்மைக்கே ஆயிற்று. இவளைக் கண்டு மகிழும் பேறு பெற்றோம்" என்று சிந்தித்து மெல்ல கனைத்தான். கனைப்பொலி கேட்டு அவள் தலைநிமிர்ந்து பார்த்தாள். சமிபத்தில் இளைஞன் ஒருவன் நிற்பதை கண்டு புன்முறுவல் பூத்தாள்.

கணபதி அவளிடம் நெருங்கி வந்து, "அழகின் சிகரமே! அன்பின் கருவூலமே! நீ யார்? தேவகுமாரியா? உன்னைக் காண ஆயிரம் கண்கள் இல்லையே என்று வருந்துகிறேன்" என்றான்.

"நான் இம்மலையில் வாழும் கந்தன் என்ற வேடனின் புதல்வி. தாங்கள் யார்?" என்று கேட்டாள்.

"பெண்மணியே உன்னைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். நீ என் இதயராணி நான் உன் இதயராஜா நீ என்னைத் திருமணம் செய்து கொள்கிறாயா?" என்று கேட்டான்.

"ஐயா! இதனை என் தந்தையாரைக் கேட்டு முடிவு செய்ய வேண்டும். அதுதானே முறை?" என்றாள். பின்னர் என்னுடன் வருங்கள் என்று அவனை அழைத்துக் கொண்டு தான் வாழும் குடிசையை சென்று அடைந்தாள். அவளுடைய தாய் தெய்வானையும், தந்தை கந்தனும் கணபதிக்கு நல்வரவு கூறினார்கள். நீர்மோர் பானகம் தந்து உபசரித்தார்கள்.

"ஐயா! தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று அன்போடு விசாரித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி, “நான் பாரத நாட்டில் இருந்து வந்தேன். என் பெயர் கணபதி. நான் கப்பல் வியாபாரி. என்னை தாங்கள் உங்கள் மருமகனாக ஏற்றுக் கொள்ள வேண்டும். என்று கேட்டான்.

கந்தன், “அன்பரே! இங்கு வேறு யாரும் கிடையாது. இறைவனே தங்களை இங்கு கொண்டு வந்து சேர்த்தார். ஆகவே என் மகளுக்குத் தாங்கள் கணவனாக இருந்து அவளைக் காப்பாற்றுங்கள்” என்றான். மறுநாள் காலை கந்தன், ஒரு மஞ்சள் துண்டைக் கயிற்றில் கட்டி, திருமாங்கல்யமாகத் தரிக்கச் செய்தான். பின் தனி அறையில் மகள் கலைமகளையும், மருமகன் கணபதியையும் இன்புறச் செய்தான்.

## (4) நாடு திரும்புதல்

கணபதி தன் மனைவியுடன் இன்ப வெள்ளத்தில் நீந்தினான். அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அவன் தாய் நாடு திரும்ப விரும்பினான். கப்பலுக்குப் பாரம் போட என்ன செய்வது என்று நினைத்து அம்மலையின் உச்சியில் ஏறிப் பார்த்தான். அங்கு மரகதக் கற்கள் இருப்பதைக் கண்டான்.

மாமனாரிடம் அனுமதி பெற்று மரகதக் கற்களில் ஒரு பகுதியை கப்பலில் ஏற்றிக் கொண்டான். தெய்வானையிடமும், கந்தனிடமும் கலைமகளும், கணபதியும் விடை பெற்றார்கள். அவர்கள் மகளையும், மருமகனையும் வாழ்த்திப் பொட்டு வைத்து வழி அனுப்பினார்கள். அவர்களும் கப்பலேறிப் புறப்பட்டார்கள். மகளின் பிரிவினால் தெய்வானையும், கந்தனும் வேதனைப்பட்டார்கள்.

கணபதி கற்புக்கரசியாகிய தன் மனைவியுடன் உல்லாசமாகக் கப்பலில் பிரயாணம் செய்தான். அவனுக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. ‘இவள் வேடன் மகள்; நான் உயர் குலத்தவன். இவளுடன் தாய் நாடு சென்றால் பழியும் இழிவும் வரும்’ என்று கருதிய கணபதி மனைவியை அழைத்துக் கொண்டு கப்பலின் உச்சிக்கு சென்றான். அவளுக்கு கடலிலுள்ள மீனைக் காட்டுவான் போல், அவளைக் கடலில் தள்ளிவிட்டான். கப்பலை வேகமாகச் செலுத்தி கொண்டு தாய் நாடு நோக்கிச் சென்றான்.

கடலில் விழுந்த கலைமகள், சிவ நாமத்தைச் சொல்லிக் கடலில் தத்தளித்தாள். ஐந்தெழுத்தின் மகிமையால் கடலில் ஒரு பலகைத் துண்டு மிதந்து வந்தது. அதைப் பற்றிக் கொண்டு தான் பிறந்த மலையை அடைந்தாள். மகளைக் கண்ட பெற்றோர்கள் பெரிதும் வியந்து அவளைத் தழுவிக் கொண்டார்கள். “அம்மா! உன் கணவனுடன் கப்பலில் சென்றனையே? எவ்வாறு இங்கு வந்தனை? என்று வினாவினார்கள்.

கலைமகள் - கணவன் தன்னை கடலில் தள்ளியதைச் சொன்னால் கணவனுக்கு ஆபத்து வரும் என்று கருதி, “அப்பா! எங்கள் கப்பல் பாறையில் மோதி உடைந்து விட்டது. உடைந்த கப்பலில் ஒரு பலகைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டைப் பற்றிக் கொண்டு இங்கு வந்து சேர்ந்தேன்" என்றாள்.

கந்தன், "அம்மா! உன் கணவன் என்ன ஆயினானோ? தெரியவில்லை கடவுள் கருணை துணைபுரியும்" என்று ஆறுதல் கூறினான்.

தாய் நாட்டை அடைந்த கணபதியை கண்ட மாலா மிகவும் பாசத்துடன் உச்சி முகர்ந்து வரவேற்றாள். அவன் கொண்டு வந்த மரகதங்களைப் பார்த்து மாலா மிகவும் ஆச்சரியப்பட்டாள். இது மிகவும் உயர்தரமான கற்கள் எனக் கூறினாள். கணபதி அந்த மரகதங்களைச் சாணை பிடித்து விற்றுக் கோடீச்வரனாக ஆனான். கோடீச்வரனான கணபதி தனக்கும், தன் பரி ஜனங்களுக்கும் நிரந்தர வருவாய் வருமாறு சில தோட்டங்களையும், விவசாய நிலங்களையும் வேண்டினான்.

இங்கு மலையில் கலைமகளுக்கு ஆணும், பெண்ணுமாக இரு குழந்தைகள் பிறந்தன. இக்குழந்தைகள் இருவருக்கும் வசந்தன், வசந்தி என்னும் பெயர்களைச் சூட்டி அருமையாக தாலாட்டி சீராட்டி வளர்த்தார்கள்.

## (5) மீண்டும் சந்திப்பு

இவ்வாறு இரண்டு ஆண்டுகள் கழிந்தது. ஒரு நாள் மாலா கவலையக இருப்பதை கண்ட கணபதி என்னவேன தாயிடம் விசாரித்தான். அவளும் உன் திருமணத்தை நினைத்துத்தான் கவலையாக இருக்கிறது என்றாள். கணபதியால் தன் மனைவி கலைமகளை மறக்க முடியவில்லை. அதனால் அவன் தனது தாயிடம் பாதி உண்மையை உரைத்தான். "அம்மா! உங்கள் மருமகள் நான் மரகதக் கற்கள் எடுத்த மலைமீது வசிக்கின்றாள். தீடீரென அவளைப் பிரிந்து அவள் பெற்றோர்களால் இருப்பது கடினம் என கூறியதால் அவளை அங்கு விட்டு வந்தேன்." என்றான்.

இதை கேட்ட மாலா பெரிதும் மகிழ்ந்து. "எனக்கு அவளைப் பார்க்க ஆசை இருக்காதா? எனது மருமகளை இங்கு அழைத்துவா, இல்லையேல் என்னை அங்கு அழைத்துச்செல்" எனக் கூறினாள். இதை கேட்ட கணபதி அவளைக் நடுக்கடலில் தள்ளிவிடடேன். அவளுக்கு என்ன நேர்ந்ததோ தெரியவில்லை, ஆதலால் அம்மாவை அழைத்துச் செல்வது சரியில்லை, நான் மட்டும் போவதுதான் உத்தமமாக இருக்கும். மரகதக் கற்களில் இன்னொரு பகுதியையும் எடுத்து வரலாம் என நினைத்தான். எனவே தாயிடம் "நான் சென்று கலைமகளை அழைத்து வருகிறேன்" என்றான். பின்னர் பிரையாணத்துக்கு தேவையான ஒழுங்குகளைச் செய்து தாயிடம் விடைபெற்று கப்பலேறிப் புறப்பட்டான்.

'மாமனார் தனது மகள் எங்கே என்று கேட்டால் என்ன சொல்லுவது?' என்று சிந்தித்தான். 'அவள் கருவுற்றிருக்கின்றாள், அதனால் அழைத்து வரவில்லை' என்று சொல்லி விடலாம் என முடிவு செய்தான். பின் கப்பலை விட்டு இறங்கிப் படகில் சென்று அம்மலையை அடைந்து, நடக்கும் போது கலைமகள் அன்று கீரை பறித்தது போல் இன்றும் பறித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். அவனுக்குச் சப்த நாடிகளும் ஒடுங்கி விட்டன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமகள் தான் கடலில் தள்ளப்பட்டதை மாமனாரிடம் கூறியிருப்பாள். எனவே மாமனார் தன்னைக் கண்டதும் கண்டந்துண்டமாக வெட்டி விடுவார் என்று நினைத்து நடுங்கிப் பதுமை போல் திகைத்து நின்றான் கணபதி.

கலைமகள் கணவனைக் கண்டு எல்லையில்லாத மகிழ்ச்சி அடைந்து ஓடிவந்து கட்டிப்பிடித்து அணைத்துக் கொண்டாள். மாமனாரிடம் காட்டிக் கொடுத்துத் தன்னைக் கொன்று விடுவாள் என்று நினைத்து பெரும் துயரம் அடைந்தான். அப்பொழுது கந்தன் வேட்டையாடிக் கொண்டு அங்கு வருவதைக் கண்டு கலைமகள், "பிராணபதி! நீங்கள் என்னைக் கடலில் தள்ளியதை என் பெற்றோர்களிடம் சொல்லவில்லை. கப்பல் உடைந்து விட்டது. ஒரு பலகைத் துண்டைப் பற்றிக் கொண்டு கரை சேர்ந்தேன். என்று பொய்தான் சொல்லியிருக்கின்றேன். தாங்களும் ஒரு பலகைத் துண்டைப் பற்றிக் கொண்டு தாய் நாடு சேர்ந்தேன் என்றே சொல்லுங்கள்" என்று கூறினாள்.

அங்கு வந்த கந்தன் மருமகனைக் கண்டு மகிழ்ச்சி அடைந்து, "மாப்பிள்ளை கப்பல் உடைந்து விட்டதாமே? தாங்கள் எவ்வாறு பிழைத்தீர்கள்?" என்று கேட்டான்.

கணபதி, மனைவியின் கருணைத் திறத்தை நினைத்து வியந்தான். "ஆம் மாமா உடைந்த கப்பலில் இருந்த பலகைத் துண்டு ஒன்றை பற்றிக் கொண்டு தாய் நாடு சேர்ந்தேன். வேறு கப்பலை அமைத்துக் கொண்டு, கலைமகளுக்கு என்ன நேர்ந்ததோ! என்று தெரியவில்லை. அவளைத்தேடி இங்கு வந்தேன்." என்றான்.

மாமனார் மிகவும் மகிழ்ந்து. அவர்களை குடிசைக்கு அழைத்து வந்தான். தாய், தாத்தாவுடன் வந்த புதிய மனிதனைக் கண்டு வசந்தன், வசந்தி இருவரும் பாட்டியின் பின் ஒழித்தார்கள். கந்தன் தன் மனைவியிடம் "மாப்பிள்ளை பலகைத் துண்டை பற்றிக் கொண்டு தாய் நாடு சென்று அவளைத்தேடி இங்கு வந்துள்ளார்." என்றார். அதை கேட்டு தெய்வானையும் மகிழ்ந்தாள்.

கலைமகள், "பிராணபதி! இவர்கள் நம் குழந்தைகள்" எனக்கூறி அவர்களை அழைத்து, "உங்கள் தந்தையார் வந்திருக்கின்றார். அவரை வணங்குங்கள்" என்றாள்.

கணபதி அகமகிழ்ந்து உடனே விரைந்து சென்று அவர்களை அணைத்து உச்சி முகர்ந்து தன் மடியில் வைத்துக் கொண்டு விளையாடினான். இக்காட்சியைப் பார்த்து மகிழ்ந்த அவளின் தாய் மாப்பிள்ளைக்கு விருந்து சமைக்க உள்ளே சென்றாள். கந்தனும் அவர்களைத் தனியே விட்டு உள்ளே சென்றான்.

கணபதி மனைவியைப் பார்த்து "அன்று உன்னை கொடூரமாக கொல்லப் பார்த்தேன். உன்னுடன் சேர்ந்து இவர்களும் இறந்திருப்பார்கள். மூன்று உயிர்களை கொன்ற பாவம் எனக்கு வந்திருக்கும், கடவுளின் கருணை துணைபுரிந்ததால் அதிலிருந்து தப்பினேன். என்னை மன்னித்துக்கொள்." என வருந்திக் கூறி அவள் காலில் விழப்போனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் உடனே தடுத்து "பிராணபதி! என்ன காரியம் செய்கின்றீர்கள். நான் ஒருபொழுதும் உங்களை தப்பாக நினைக்கவில்லை. நீங்கள் அன்று நடந்து கொண்டதற்கு ஏதாவது காரணம் இருக்கும். என்மீது நீங்கள் வைத்திருக்கும் அன்பை நான் அறிவேன்." எனக்கூறி அவனை இறுகத் தழுவிக் கொண்டாள். அவனும் அவள் தோளில் தலை சாய்த்து அமைதி கொண்டான்.

## (6) சிறந்த செல்வம்

அன்றிரவு கணபதி மனைவி, மக்களுடன் இனிதே விளையாடி உறங்க வைத்தான். அவனால் உறங்க முடியவில்லை. அவன் தனக்குள் சிந்திக்கலானான்: 'என்னைக் கடவுளாக நம்பி உடன் வந்த இந்த உத்தம பத்தினியை நடுக்கடலில் தள்ளினேன். ஊர் வாய்க்குப் பயந்து இரக்கமின்றி இவளைக் கொல்ல முயற்சி செய்தேன். ஆனால் இவளோ, தன் தந்தையிடம் பொய்புகன்றேனும் என்னைக் காப்பாற்ற நினைத்தாள். வள்ளுவர் பெருமான் கூறியது போல் கெடுதல் செய்த எனக்கு நன்மை செய்து என்னை நாண வைத்திருக்கிறாள்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்."

என்று படித்தது நினைவு வருகிறது. செல்வம் வரும், போகும்; மீண்டும் வரும். ஆனால் உத்தம குணங்கள் சுலபத்தில் வருவதில்லை. நான் செல்வம் சேர்ப்பதுடன் இனி நற்குணங்களையும் சேகரித்துக் கொள்வேன். அதுவே செல்வத்துள் சிறந்த செல்வம்.' இவ்வாறு முடிவு செய்த பின்புதான் அவனால் உறங்க முடிந்தது.

சிலதினங்கள் அத்தீவில் தங்கி, மேலும் பல மரகதங்களை எடுத்துக் கொண்டு தன் அன்பு மனைவியுடன் தாய் நாடு திரும்பினான். மாலாவும் ஆலாத்தி எடுத்து, அன்பு மருமகளையும், பேரப்பிள்ளைகளையும் அணைத்து வலது காலை வைத்து வருமாறு கூறி வரவேற்றாள்.

கணபதி தன் அன்பு மனைவியுடனும், மக்களுடனும் இனிது வாழ்ந்து, அவள் பெயரில் பல அறங்களைச் செய்து, மக்களிடம் நன்மதிப்பும் புகழும் பெற்ற தனவந்தனாக விளங்கினான்.

திருமதி. விமலா மணிவாசகன்.
மலர் ஆசிரியர்.

நன்றி :- மூலக் கதை, திருமுருக கிருபானந்த வாரியார். கல்கி தீபாவளி மலர் 1989

0 முதல் 30 வரை
நீங்கள் சந்தோஷமானவர் இல்லை. ஆனால் உங்களை மாற்றிக்கொள்ள முடியும். தன்னம்பிக்கை
பக்கம் 23

பக்கம் 45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அற்புதச்சக்தி

ஓர் அழகிய, அற்புதமான அறிவுச்சக்தி ஒன்று ஓய்வின்றிச் செயற்பட்டுக் கொண்டே இருக்கிறது. எங்கள் அறிவுக்கும், ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட, அந்த சக்தியானது பிரபஞ்சம் முழுவதும் பாலில் வெண்ணெய் போலக் கலந்திருக்கிறது. அது கருணையே வடிவமானது. சைவர்கள் அதைச் சிவன் என அழைப்பர். ஆன்மாக்கள் அநாதியாகவே பாசங்களினால் கட்டுண்டு அல்லலுறும் துன்பத்தை நீக்கும் பொருட்டு, சிவபெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்கள் மூலம் ஆன்மாக்களுக்கு போகத்தைக் கொடுத்து பாசங்களில் இருந்து விடுவித்து மோட்சத்தை அருள்வதாகச் சைவசித்தாந்தம் விளக்குகிறது.

# நல்வாழ்வுக்கான சில நற்சிந்தனைகள்

"அரிது அரிது அரிது...." மானிடராதல் என ஔவையார் கூறியுள்ளார். "திருவந்த புவனம்" எனத் தொல்லைப் கந்தபுராணம் இப்பூமியைப் போற்றுகின்றது. நல்ல உலகிலுள்ள எண்ணற்ற பிறவிகளுள் சிறந்ததான ஆறறிவுள்ள மானுடப் பிறவி திருவருளால் தரப்பட்டு பிறந்துள்ளோம்.

பெறுதற்கரிய இம் மானுடப் பிறவி பெற்றதன் நோக்கத்தை அறிந்து பிறவியின் பயனை பெறும் வழியை அறிவிக்கும் சன்மார்க்கத்தை கடைபிடித்து ஒழுகுதல் எமது கடமையாகும். திருஞானசம்பந்தர் எமது மனித நிலையைப் பற்றிக் குறிப்பிடும்போது "போம்வழிவந்து, இழிவு, ஏற்றமானார்." (1–8–3) அதாவது, பிறவிநீங்கி உயர்வடைந்து போகக்கூடிய வழியில்வந்து மனிதராகப் பிறந்தும், தீயன செய்து பலர் இழிவு அடைகின்றனர். சிலர் நல்லனசெய்து உத்தம வாழ்க்கை வாழ்ந்து உயர் நிலை அடைகின்றனர்.

புன்னெறியதனில் செல்லும் போக்கினை விலக்க வேண்டும்.

மனிதப்பிறவி எடுத்ததன் பயனைப்பெறாது தீயன செய்து வாழ் நாளை வீணாளாக்குவோரைப் பார்த்து இரங்குவர் ஞானிகள். ஒரு சித்தர் இத்தகையோரைக் குறித்துப் பின் வருமாறு கூறுகின்றார். சித்தர்கள் பூடகமாக விடுகதை போன்று பல கருத்துக்களை வெளிப்படுத்துவர்.

நந்த வனத்திலோர் ஆண்டி, அவன் நாலாறு
மாதமாய்க் குயவனை வேண்டி, கொண்டு
வந்தான் ஒரு தோண்டி, அதைக் கூத்தாடிக்
கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நந்த வனம் – பூமி. ஆண்டி – ஆன்மா. நாலு+ ஆறு மாதம் = 10 மாதம். குயவன் – இறைவன். தோண்டி – மானிடதேகம். கூத்தாடிப் போட்டுடைத்தல் – மானிடதேகம் பெற்றதன் பயனைப் பெறாது தீயன புரிந்து கெடுதல்.) எமது வாழ்க்கையில் பாவம் செய்வதை விலக்க வேண்டும்.

## மேலாம் நன்னெறியில் ஒழுகுதல்

இம் மானுடப் பிறவியை வீணாக்காது நல்ல செயல்களை செய்ய வேண்டும். புண்ணியங்களைச் செய்து நல்வழியில் வாழவேண்டும். இவ்வுலகில் வாழும் பலவகை உயிர் இனங்களும் எம் நல்வாழ்வுக்கு துணைபுரிகின்றன. ஆதலால் நாமும் ஏனைய உயிர் இனங்களுக்கு எவ்வகையான துன்பமும் செய்யாது அவற்றின் நல்வாழ்வுக்கு இயன்றவரை உதவ வேண்டும். அதே போல் எமது சுற்றத்தவர், அயலவர், நண்பர் போன்ற எம்முடன் தொடர்புடைய அனைவருடனும் அன்புள்ளவர்களாக இருந்து அவர்களின் நன்மைக்கு வேண்டியவற்றை செய்து வரவேண்டும். எம்முடன் தொடர்பில்லாதவர்களாயிருப்பினும் இவ்வுலகிற் பிறந்த மனிதர் யாவரும் எமது சகோதராகள் என்று மதித்து யாவரிடமும் அன்புடையராயிருத்தல் அவசியமாகும். "மக்கள் சேவையே மகேஸ்வரன் பூசை" எனக்கருதி நலிவடைந்தோருக்கு இயன்றவகையில் உதவுதல் எமது கடமையாகும். இவ்வாறு பாவங்களை தவிர்த்து புண்ணியங்களைச் செய்து வரும்போது எமது உள்ளம் தூய்மையடையும். "எச்சமயத்தோர் சொல்லும் தீது ஒழிய நன்மை செயல்" என்பது ஔவையார் வாக்கு. இதுவே எம்மை மேலும் உயரச் செய்யும் வழி. மேலாம் நன்நெறி ஒழுகுதல் அவசியம்.

## நவையறு காட்சி பெறுதல்

சுப்பிரமணிய பாரதியார் தம் காலத்தில் வாழ்ந்த சில சித்தர்களோடு தொடர்பு வைத்திருந்தவர். ஒரு நாள் சித்தர் ஒருவர் பழங்கந்தைகள் நிறைந்த அழுக்கு மூட்டையைச் சுமந்து கொண்டு பாரதியார் முன்பு வந்தார். பாரதியார் அவரைப் பார்த்து "இது என்ன? அழுக்கு மூட்டையைச் சுமந்து கொண்டு திரிவது பித்தருடைய செய்கையல்லவா?" என்று கேட்டார். அதற்குச் சித்தர் புன்னகை செய்து "புறத்தே நான் சுமக்கின்றேன் அகத்தினுள்ளே இன்னதொரு பழங்குப்பை சுமக்கிறாய் நீ" என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார். காமம், வெகுளி, பொறாமை, வஞ்சனை, பிறர்கேடு நினைத்தல், மனக்கவலை முதலிய எண்ணற்ற எதிர்மறைச் சிந்தனைகளான குப்பைகளை எமது மனத்தினுள்ளே சேரவிடாது அகற்றி விடுதல் வேண்டும். இறைத்தியானம், ஆசைகளை விட்டொழித்தல், தூய்மையான எண்ணங்கள், பிற உயிர்களிடம் அன்பு செலுத்துதல், உண்மைபேசுதல், அறநெறி வாழ்க்கை, மனத்திருப்தி ஆகிய ஆக்க சிந்தனைகளை வளர்த்தலால் மனம் தூய்மைபெறும்.

மனத்தூய்மை அடைந்தவர்க்கே உண்மை அறிவு (நவையறு காட்சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயமாகும். நவையறு காட்சி பெற்றவர்களே ஞானிகள், சிவனடியார் என அழைக்கப்படுவர். சிவனடியார்கள் விருப்பு, வெறுப்பு அற்றவர்கள். இறைவனிடம் பூரணசரணாகதி அடைந்து தம் கடமைகளை எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராது செய்து வருவர். அதனால் வினைப்பயன்கள் அவர்களைச் சேருவதில்லை.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (திருக்குறள்)

## சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறல் அரிது....

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்" என ஆறுமுகநாவலர் குறிப்பிட்டுள்ளார். இதை மறாவாது அரிதில் கிடைத்த இந்த மானிடசரீரம் உள்ள பொழுதிலேயே இறைவனை வணங்கி இப்பிறவியின் பயனை அடைதல் வேண்டும். இறைவழிபாடு, பிரர்த்தனை என்பன மன அமைதியையும் தூய அன்பினையும் வளர்க்க உதவுகின்றன. எங்கும் எப்பொழுதும் இறைவன் இருக்கின்றான். என்பதை உணரும் மனம் தீயவழிகளை நாடாது. இறைவன் எமக்கு தாயாகவும், தந்தையாகவும் விளங்குவதாக எமது சைவதிருமுறைகள் கூறுகின்றன. அத்துடன் உயிர்க்கு உயிராகவும் விளங்குகின்றார். "உரை சேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேதம் நிரை சேரப் படைத்து அவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான்" என திருஞானசம்பந்தர் அருளியுள்ளார்.

சென்ற நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த தவமுனிவராகிய யோகர்சுவாமி, ஒரு நாள் தன்னைத் தரிசிக்கவந்த அன்பர் ஒருவரைப் பார்த்து, "கடவுளால் செய்ய முடியாதது எது?" எனத் திடீரென வினவினார். அன்பர் திகைத்து நிற்பதைப் பார்த்த சுவாமிகள், "கடவுளால் ஒரு கணமும் உன்னை விட்டுப் பிரிந்திருக்க முடியாது" என்று தாமே விடைகூறிவிட்டுச் சிரித்தாராம். இது ஒரு பேருண்மையாகும். மணிவாசகப்பெருமான் திருவாசகத்தில் சிவபுராணத்தை "நமச்சிவாய வாழ்க, நாதன்தாள் வாழ்க, **இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்தாள் வாழ்க**" என்று தொடங்கி பாடியுள்ளார். திருச்சதகத்தில் "உடையான் அடிநாயேனைத் தினையின் பாகமும் பிறிவது திருக்குறிப்பு அன்று." என்று குறிப்பிட்டுள்ளார். இதை உணராமையே எமது துன்பங்களுக்கு மூலகாரணம்.

சைவசித்தாந்த தத்துவம் இறைவன் "உலகெலாமாகி வேறாய் உடனுமாய்" இருப்பதாகக் கூறும். அதேபோல் ஆன்மாவிலும் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று அருள்புரிவதாக கூறுகின்றது. இது அத்துவித சம்பந்தம் எனப்படும். இச் சம்பந்தம் பற்றிய உணர்வு விளக்கம் ஏற்பட்ட ஆன்மா தானும் இறைவனைச் சிக்கெனப் பிடித்துக்கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவதினியே.

(திருவாசகம்)

எம்மை ஒரு கணமும் பிரியாது இருந்து அருளைப் பொழிந்து கொண்டிருக்கும் இறைவனின் அருளை நினைந்து உருகி வழிபடுதலே மானுடப் பிறவி பெற்றதின் பயனாகும். இவ்வழிபாட்டிற்கு எமது சமய குரவர்கள் இயற்றிய தேவாரம், திருவாசகம் முதலிய சைவதிருமுறைகள் அருந்துணையாக உள்ளன.

சிவபரம்பொருள் எங்களுடைய மனத்துக்கு எட்டாதவர். அவர் வடிவம் முதலியவற்றிற்கு அப்பாற்பட்டவர். காண்பரிய பேரொளியாய் உள்ளவர். அவரை அவருடைய திருவருள் செயல்களால் ஒருவாறு அறியலாம். கடவுள் உருவம் இல்லாதவராயினும் அவரை நினைத்தற்காகவும், வணங்குவதற்காகவும் உருவம் சொல்லப்பட்டிருக்கிறது. சைவமரபில் சிவனின் திருவருளை சிவனின் திருவடி என வழங்குகிறோம். உமாதேவியாராகவும் வழிபடுகிறோம். விநாயகர், முருகன் என்ற மூர்த்திகளாகவும் வழிபடுகிறோம். எமது சமய குரவர்கள் காட்டிய அன்பு நெறியே இறைவனை வழிபட்டு முத்தியடைவதற்கு பாதுகாப்பானதும் நிச்சயமானதுமான வழியாகும். சிவன் மீது அன்பு, சிவனடியார் மீது அன்பு, சிவன் கோயில் கொண்டுறையும் சகல சீவராசிகள் மீதும் அன்பு என அன்பு நெறி விரிந்து செல்லும். அப்பர் சுவாமிகள் “தயாமூலதன்மம் என்னும் தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம் நலங்கொடுக்கும் நம்பி” என்று சிவபெருமானைப் போற்றுகின்றார். திருமூலர் திருமந்திரத்தில் “அன்பே சிவமாவது” எனக்குறிப்பிடுகிறார்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

“அன்போடுருகி அகம் குழைவார்க்கன்றி
என்பொன் மணியினை எய்த ஒண்ணாதே” (திருமந்திரம்)

அன்பின்றிச் செய்யும் எந்தவழிபாடுகளும் பயனற்றவையாகும். சைவசமயத்தின் அடிப்படை அன்பேயாகும். சமயம் படிப்பதற்கு மட்டுமல்ல, நல்வாழ்வு வாழ்வதற்கும் மிக அவசியமானது. கடவுள் எம்மை விட்டுப்பிரியாது என்றும் எம்முடனிருந்து யாம் நினைக்கும் நினைவுகளையும், பேசும் சொற்களையும், செய்யும் செயல்களையும் அறிந்து கொண்டிருப்பதை, உற்று உணர்ந்தால், எமது மனம், வாக்கு, காயம் என்பன தூய்மை பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சைவன் ஆவான் திருந்திய சிந்தையன், சொல்லினன், செயலன்" எனப் பெரியோர் கூறுவர்.

ஆன்மா இறைவனை அடைவதற்கு ஏற்ற பக்குவம் அடைந்த நிலையில், இறைவன் அந்த ஆன்மாவைத் தேடிச்சென்று ஆட்கொள்கிறான். கந்தபுராணத்தில் வள்ளி திருமணம் இதையே குறிக்கின்றது. இந்தக் கருத்தினைக் கந்தபுராணத்தில் முருகன் வள்ளியை இச்சித்துத் திருமணம் செய்தானென்ற கதை மறைமுகமாகப் புலப்படுத்துகின்றது. ஆன்மா இறைவனுடன் சேர்தல் என்பது முத்தி பெறுதல் எனப்படும். வள்ளி அம்மன் வேடர்களின் மத்தியில் வாழ்ந்தாரென்பது, ஆன்மாவானது ஐம்புலன்களின் சிறையில் அகப்பட்டு வாழுதலைக் குறிக்கின்றது. பக்குவமடைந்த ஆன்மா இறைவன் அருளால் உண்மை ஞானம் உதிக்கப்பெற்று இறைவனுடன் இணைந்துவிடும்.

இறைவன் பக்குவமடைந்த ஆன்மாவை குருவடிவாக வந்து உண்மையை உணர்த்தி ஆட்கொண்டு தமது திருவடிகளில் சேர்ப்பர்.

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து என,
தம்முதல் குருவும் ஆய், தவத்தினில் உணர்த்த
விட்டு அன்னியம் இன்னமயின் அரன் கழல் செலுமே (சிவஞானபோதம்)

கந்தபுராணத்தில் முருகன் பக்குவமடைந்த ஆன்மாவாகிய வள்ளியை நோக்கி கூறுகிறார்.

"புல்லிது புல்லிது புனத்தைக் காத்திடல்
மெல்லியல் வருதியால், விண்ணின் பால்வரும்
வல்லியர் யாவரும் வணங்கி வாழ்திடத்
தொல்லியல் வழாவளம் துய்க்க நல்குவேன்."

புனத்தைக் காத்திடல் – உலக இன்பம் அனுபவித்து மயங்கி இருத்தல்.
தொல்லியல் வழாவளம் – பேரின்ப வாழ்வு ஆகிய முத்தி இன்பம்.

புன்னெறியதனில் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி.
(கந்தபுராணம்)

திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை
உபதலைவி
யா. இ. ம க பழைய மாணவிகள் சங்கம்

யாழ்ப்பாணத்தில் அகில இலங்கை இந்து மாமன்றம் தனது புதிய கட்டிடத்தை நல்லூர் வீதியில் திறந்து வைத்தது எமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்த நிகழ்வில் பெரும் பங்கு வகித்தவர் எங்கள் சங்க உபதலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளை என்பதை பெருமையுடன் அறியத்தருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதகங்களை விளைவிக்கும் நொறுக்குத் தீனி

மூன்று வேளை முழுதான போஷாக்குள்ள உணவை வயிராற உண்டு ஆரோக்கியமாக வாழ்ந்த காலம் மலையேறி விட்டது. அடிக்கடி எதையாவது மென்று தின்று இடைக்கிடை மென்பானம் அருந்துவது இன்றைய நாகரீகம் இவ்வாறு வாயில் போட்டு மெல்லுவதற்கென கடைகளில் ஏராளமான நொறுக்குத்தீனிகள் (Junk Food) விற்பனையாகிறது. ஊடகங்களில் அவற்றுக்கு கவர்ச்சியான பலத்த விளம்பரமும் உள்ளது.

நொறுக்குத்தீனி தயாரிப்பவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. குறைந்த செலவில் இவற்றைத் தயாரிக்கலாம் குளிரூட்டியில் வைத்துத்தான் நீண்ட நாட்கள் உபயோகிக்கலாம் என்ற அவசியமும் இல்லை. நாவிலிருந்து உமிழ்நீரை ஊற வைக்கும் பற்பல சுவை கொண்ட நறுமணங்களை சேர்த்துத் தயாரிக்கலாம்.

இதனால் இந்த வகை உணவுகளைத் தயாரிக்க பலரும் முன்வருகிறார்கள். கடைகளில் விதவிதமான வர்ணக் கடதாசி பக்கட்களில் இவை தொங்க விடப்பட்டிருக்கும். சிறுவர்கள் பெற்றோரிடம் அனுமதி கேட்காமலே கையை நீட்டி இரண்டு மூன்று என்று இவற்றை எடுத்து அம்மாவின் கூடைக்குள் போட்டு விடுவதை சாதாரணமாகக் காணலாம். இந்த வகையான உணவுகளில் கூடுதலான அளவு சீனி, உப்பு, மொனோ சோடியம் குளூற்றாமேட் (Glutamate) போன்ற உணவு சுவையூட்டிகள் சேர்க்கப்பட்டிருப்பதைப் பலரும் கவனிப்பதில்லை.

இவை சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படுகின்றனவா என்பதையும் சிந்திப்பதில்லை. காலையில் ஆகாரம் உட்கொள்ளாமல் சிறுவர்கள் பாடசாலைக்குப் புறப்பட்டு விடுகிறார்கள். வழியில் ஸ்னாக்ஸ் (Snacks) என்று நொறுக்குத்தீனியாக றோல்ஸ், கட்லட், பற்றீஸ் ஆகியவற்றை பொலித்தீன் பைகளில் வாங்கிக் கொண்டு அவசர அவசரமாக பஸ் ஏறிப்பாடசாலைக்குச் செல்கிறார்கள். போகும் வழியில் அல்லது பாடசாலை இடைவேளையில் இவற்றைச் சாப்பிட்டுவிட்டு கடதாசியால் வாயைத் துடைத்துவிட்டு வயிறு நிரம்பிவிட்ட மகிழ்ச்சியில் இருக்கிறார்கள். பெற்றோரும் சமையல் செய்வதிலும் பார்க்க பிள்ளைகள் விரும்பியுண்ணும் இவற்றை சுலபமாக வாங்கிக் கொடுத்துவிட்டு வீடு திரும்பி விடுகிறார்கள். இந்த நொறுக்குத்தீனி வகைகள் ஆரோக்கியமான வாழ்விற்கு உகந்தவையா என்பதை எவரும் எண்ணிப்பார்ப்பதில்லை. எத்தகைய எண்ணெயில் இவை பொரிக்கப்படுகின்றன என்று எவருக்கும் தெரியாது. இந்த வகை உணவுகளை சிறுவர்கள் சுவைக்க உந்து கோலாக பாட்மான், சுப்பர்மான் என்று பெயர்கள் இவற்றுக்குச் சூட்டப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாட்டில் எவரும் உணவு விற்பனைசாலையை எங்கும் ஆரம்பிக்கலாம். சுமார் 40,000 சிறிய உணவு விற்பனைசாலைகள் இருப்பதாக ஒரு மதிப்பீடு தெரிவிக்கிறது. ஒரு சங்கிலித் தொடராக நொறுக்குத்தீனி விற்பனைசாலையில் பார்க்கும் இடமெல்லாம் காட்சி தருகின்றன. சிறுவர்களும் இளைஞர்களும் மாத்திரமல்லாது வயது வந்தோரும் இவற்றில் உணவுப் பொருட்களை வாங்கி உண்கிறார்கள். மேற்கு நாடுகளில் ஒரு புற்றுநோய் போல் பரவிய ஜங்பூட் (Junkbood) கடைகள் இப்பொழுது வெகுவாகக் குறைந்து விட்டன. நுகர்வோரின் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்தப்பட்டதால் இந்த நிலைமை தோன்றியுள்ளது. ஆனால் வளர்முக நாடுகள் மேற்கத்திய உணவுப்பழக்கங்களை இப்பொழுதுதான் தீவிரமாக கடைப்பிடிக்கத் தொடங்கி இருக்கின்றன.

சில கடைகளில் முதல்நாளே தயாரித்த சிற்றுண்டி வகைகள் பாதி பழுதடைந்த நிலையில் வைக்கப்பட்டிருக்கும் வெளித்தோற்றத்தில் அவை பழுதடைந்திருப்பது தெரியாது. உண்ட பின்தான் ஜீரணக்கோளாறு ஏற்படுகிறது. நொறுக்குத்தீனிகளை உண்பதால் தான் உடற்பருமன் கூடுகிறது. இரண்டாவது நீரிழிவு நோய் ஏற்படுகின்றது. பற்கள் சொத்தையாகின்றன என்று பல பாதக விளைவுகள் பற்றி மேற்கத்தைய நாடுகளில் பிரசாரம் செய்கிறார்கள்.

எமது நாட்டில் இத்தகைய பிரசாரம் காணப்படவில்லை. ஏனைய பொருட்களுக்கு அவை எப்பொழுது தயாரிக்கப்பட்டன, எந்தத் திகதிவரை அவற்றை உபயோகிக்கலாம், என்ன என்ன பொருட்கள் சேர்க்கப்பட்டுள்ளன போன்ற விபரங்கள் எழுதப்பட்டிருக்கும். ஆனால் நொறுக்குத்தீனிகளில் இந்த விபரங்களை காணமுடியாது. அவற்றைத் தெரிந்து கொள்ள நுகர்வோரும் அக்கறை காண்பிப்பதில்லை. இந்த ஆண்டு உலக நுகர்வோர் தினம் சமீபத்தில் அனுஷ்டிக்கப்பட்டபோதுதான் இந்த நொறுக்குத்தீனி அபாயத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. நொறுங்கத் தின்றால் நூறு வயது வரை வாழலாம். ஆனால் இத்தகைய நொறுக்குத்தீனி தின்றால்? என்று கேள்வி எழுப்பி பதில்களை காணவேண்டியது அவசியமாகும்.

செல்வி. சற்சொரூபவதி நாதன்
உபதலைவி யா. இ. ம. க - ப. மா. ச - கொழும்பு.

நன்றி — வீரகேசரி சங்கமம் 05-04-2008 பக்கம் 2

தரும் புத்தகங்களைப் படியுங்கள். நல்ல நண்பர்களை உருவாக்கிக் கொள்ளுங்கள். எது நடந்தாலும் அதில் உள்ள நல்லதைப் பாருங்கள்.

35 முதல் 70 வரை

சந்தோஷம் பாதி துக்கம் பாதி கலந்து செய்த வாழ்க்கை உங்களுடையது. குறைந்த மதிப்பெண்கள் பெற்ற கேள்விகளை மறுபரிசீலனை செய்யுங்கள். வாழ்க்கையில் சில விஷயங்களை நாம் மாற்ற முடியாது. அவற்றைப் பார்க்கும் விதத்தை மாற்றிக் கொள்ளலாம்.

பக்கம் 38 பக்கம் 47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய மட்டத்தில் நடைபெற்ற தமிழ்த் தினப்போட்டியில் பங்குபற்றுவதற்கு வருகை தந்திருந்த, யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கும், ஆசிரியர்களுக்கும், யாழ் இந்து மகளிர் கல்லூரி கொழும்பு பழைய மாணவிகளால் அளிக்கப்பட்ட விருந்துபசாரம். மிககுறுகிய காலத்தில் சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணரால் ஒழுங்கு செய்யப்பட்டு 2008ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிமை மதியம் 12.00 மணி தொடக்கம் 2.00 மணி வரை Colombo-4, Shrubbery Garden 3A, Greenlands Hotel இல் நடைபெற்றது.

# மதியபோசன விருந்து

மதியபோசன விருந்தில் பங்குபற்றிய சங்க அங்கத்தவர்கள். திருமதி சிவகாமி அம்பலவாணர், திருமதி அபிராமி கயிலாசபிள்ளை, திருமதி விமலா மணிவாசகன், திருமதி தயாநிதி செல்வநாயகம், திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன், திருமதி சாரதாம்பாள் மனோகரன், திருமதி சாவித்திரி உமாமகேஸ்வரன் ஆகியோர். வருகை தந்திருந்த ஆசிரியர்கள் திருமதி காமினி நாகேந்திரராஜா, செல்வி தபோதினி இராசதுரை, திருமதி குமுதினி உருத்திரகுமாரன், திருமதி தேவமனோகரி உருத்திரசிங்கம், மாணவிகள் செல்வி பிரவீனா கிரிதரன், செல்வி சந்திரிகா செல்வத்துரை ஆகியோர். பங்குபற்றியோர் படம் பின் உள் அட்டை திருமதி சக்திதேவி சிவகுமார் தவிர்க்க முடியாத காரணத்தால் வருகை தரவில்லை.

வழமை போல் எங்கள் சங்கத்துக்கு படங்கள் எடுக்கும் திரு இராமலிங்கம் அவர்களும் இவ்விருந்துபசாரத்தில் பங்குபற்றி படங்கள் எடுத்தார்.

திருமதி சிவகாமி அம்பலவாணர் வரவேற்புரை நிகழ்த்தியதுடன், 2007ஆம் ஆண்டு தனிநடனத்திலும் சங்கீதத்திலும் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவிகளை பாராட்டி சங்கத்தின் சார்பில் சிறு அன்பளிப்பும் வழங்கினார். (படங்கள் பின் உள்அட்டை)

| | | | |
|---|---|---|---|
| செல்வி பிரவீனா கிரிதரன் | தனிநடனம் | தரம் 4 | முதலிடம் |
| செல்வி சந்திரிகா செல்வத்துரை | சங்கீதம் | தரம் 5 | முதலிடம் |

ஆசிரியர் திருமதி தேவமனோகரி உருத்திரசிங்கம் அவர்கள் உரையாற்றினார். மாணவி செல்வி சந்திரிகா செல்வத்துரை நன்றியுரை வழங்கினார். மதியபோசன விருந்தும் இனிதே நிறைவு பெற்றது.

திருமதி. விமலா மணிவாசகன்.
மலர் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர்கள் - கனடா ஒன்று கூடல் 2007ம் ஆண்டு யூலை மாதம் 7ம் திகதி சனிக்கிழமை செல்வி. குழந்தைவேல் ஆசிரியையின் தலைமையில் Canada Morning Side Park இல் காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பழைய மாணவர்கள், இடைப்பட்ட மாணவர்கள், கணவர் பிள்ளைகளுடன் வந்திருந்தார்கள். மதிய போசனம், பலவித சாப்பாடுகள் கொண்டு வரப்பட்டன. சிறியவர்கள் 5 வயதிற்கு உட்பட்டவர்கள், கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, பெரியவர்கள் எல்லோரும் பங்குபற்றியது மிகவும் ஆனந்தமாக இருந்தது.

# ஒன்று கூடல் (கனடா)

ஓட்டம், போத்தலில் தண்ணீர் நிரப்பல், இருவர் கால் கட்டி மூன்று கால் ஓட்டம் என்னும் பலவித விளையாட்டுக்கள், 5 வயதிற்கு உட்பட்டவர்களில் ஒரு வயதான செல்வி. சத்தினி சிவநேசன் என்ற மிகச் சிறிய குழந்தையும் பல பிள்ளைகளுடன் ஓட்ட போற்றியில் பங்குபற்றி ஒருபடியாக 3ம் இடம் பெற்றுவிட்டாள். செல்வி. சத்தினி சிவநேசன் என் பேரப்பிள்ளை (திருமதி. சத்தியலெட்சுமியின் பேத்தி) ஆவார்.

பெரியவர்கள் சங்கீதக் கதிரை, கயிற்றுஇழுவை, பழைய பாட்டுக்கள் பாடுதல் ஆகியவற்றில் பங்குபற்றினார்கள். ஆண்களும் பெண்களும் சேர்ந்து கயிறுஇழுத்தோம். அதில் நான் நின்ற பக்கம் விழுந்து விட்டோம். ஏமாற்றத்தால் எங்கள் பக்கம் ஆண்கள் குறைவு என்று மறுபடியும் கயிறுஇழுத்தோம். நாம் தோற்றுவிட்டோம்.

காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை ஒரே கொண்டாட்டம். வேண்டியபடி விளையாட்டும், சாப்பாடும் எல்லோரும் பிரியாவிடை கூறி வீடு வந்தோம். மறக்க முடியாத நாள். பழைய மாணவர்கள் கூடும் நாள்.

No 6, Qaiet Broor Cresent
Searboroagh (ont)
MIX 2B2
Canada

திருமதி. சத்தியலெட்சுமி சிவலிங்கம்
பழைய மாணவி
கனடா

அது உங்கள் கையில்தான் உள்ளது.
75 முதல் 100 வரை

நீங்கள் அதிஷ்டக்காரர். உங்கள் சந்தோஷத்துக்குக் காரணம் உங்கள் அதிஷ்டம் அல்ல.
பக்கம் 45
பக்கம் 49

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் நாகரிக வளர்ச்சியடைந்து மனித சமுதாயத்தின் உன்னத தோற்றத்தை உணர்ந்து அதன்மேம்பாட்டிற்காக மென்மேலும் நல்ல உய்தலுக்குரிய செயல்களில் தனது சிந்தனையைத் திணித்து வருகின்றான். அந்த வகையிலே மானிடத்தின் உயர் பண்பினை வளர்த்தெடுக்க, முக்கியத்துவத்தை மையப்படுத்த அன்னையர் தினம், குழந்தைகள் தினம், முதியோர் தினம், வெள்ளைப் பிரம்பு தினம், மகளிர் தினம் என இன்னோரன்ன பல தினங்களை இத்தகைய விசேட நினைவுகளுக்கென ஒதுக்கி, அவற்றின் தார தம்மியங்களை பரிசீலனை செய்து உயர்த்தும் வகையில் யோசிக்கத் தூண்டுகிறான்.

இத்தகைய தினங்கள் நம் அன்றாட நெருக்கமான வேலைப் பளுக்களின் மத்தியிலும் நம்மைச் சற்று நிதானப்படுத்தி அவற்றின் அவசியத்தை இரை மீட்க வைக்கின்றன. பங்குனி எட்டாம் நாள் என்றதும் பெண்களுக்கான இத்தினம் நம் எல்லோருடைய மனதிலும் பல சிந்தனை அலைகளை எழுப்புகின்றன, வருடா வருடம் கலண்டரில் வந்து போகின்ற தினமானாலும் இவ்வருட இத்தினத்தின் முக்கியத்துவமென்ன? என நாம் எண்ணிப் பார்க்கலாம்!

பலரும் பெண்ணடிமைத்தனம், பெண் ஒடுக்கு முறை ஆண், பெண் சமத்துவமின்மை என்பவை பற்றி உணர்ந்து கொண்டாலும் இச்சிக்கல்களுக்குரிய முடிச்சுகளை அவிழ்த்தெறியும் வழி வகை தெரியாது தடுமாறுகின்றனர் என்று சொல்லலாம். இதற்கான பங்கு முழுதும் மனித சமூகத்தைச் சேர்ந்ததென்று நாம்

**முதலில் நம் நாட்டில் சமாதான நடவடிக்கைகளை கூர்மைப்படுத்த வேண்டும்**

மேலெழுந்தவாரியாகக் கூறிவிட்டு வாளாவிருக்க முடியாது. பாரிய பங்கு சமூகத்தின் சரிபாதியான பெண்களிலும் தங்கியுள்ளது என்பதை யாரும் மறுக்க மடியாது.

பெண்கள் முன்னரைப் போலன்றி இன்று எல்லோருமே கல்வியைக் கருந்தனமாகக் கொண்டு தம் அறிவை வளர்க்கின்றனர். பல துறைகளிலும் தமது செயற்பாடுகளை விரிவாக்கியுள்ளனர்; அடுப்பும் நெருப்பும் குழந்தைகளும் குடும்பமுமே வாழ்வாக மலர்ந்திருந்த வாழ்க்கை பெரிதும் மாற்றமடைந்து பல பல புதிய சாதனைகளில் தமது முத்திரையைப் பதித்துள்ளனர். என்றாலும் முற்று முழுதாகப் பெண்ணினம் விடிவையடைந்து விட்டதோ என்றால் இல்லை என்ற குரலே பலமாக ஒலிக்கும். சுதந்திரப் பாதை திறக்கப்படுகின்ற தென்றாலும் அதில் நடைபோடும் பெண்களின் முயற்சிகள் சோம்பல் மிக்கவையாக தாழ்வுச் சிக்கலிலிருந்தும் முற்று முழுதாக விடுபடமுடியாதவர்களாகத் தம்மைத் தாழ்த்திக் கொள்கிறார்கள் போல் தெரிகிறது. பல்லாண்டுகளாக அடிமை வாழ்வில் ஊறிக்கிடந்த எச்ச சொச்சங்களை முற்று முழுதாக அவர்கள் விட்டொழித்ததாகத் தெரியவில்லை.

பட்டை மேல் பட்டையாகப் படிந்து விட்ட நம்பிக்கைகள், மரபுகள், கலாசார இறுக்கங்கள், அவர்களை அடிமைப் புத்திக்கே கட்டிப் போடுகிறது. இவற்றை நீக்கி முற்று முழுதாக விழிப்படைய முயற்சிக்கும் செயலூக்கத்திற்கான உந்துதலே இந்த மகளிர் தினம்.

இத்தகைய ஆழம்மிக்க கருத்தினைக் கொண்ட மகளிர் தின ஒழுங்குகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தகையனவாக அமைய வேண்டும்? என்பது நியாயமான கேள்விக்குரிய ஒரு நிலைப்பாடுதான்.

இதுவரை இடம்பெற்ற பழைய இத்துப்போன சங்கதிகளையெல்லாம் தூக்கிக் கொண்டு இது தப்பு இது தவறு என்று கணக்கெடுக்கும் முறையை அறவே மறந்துவிட்டு இனி வரப்போகும் புதிய சமுதாயத்தில் விஞ்ஞான தொழில் நுட்ப அறிவுமிக்க எம் சமூகத்தில் பெண்ணின் இடம் எது பெண் எத்தகைய பணிகளை ஆற்றுவதில் அறிவையும் ஆற்றலையும் மிக விரிவாகப் பயன்படுத்த வேண்டும் என்ற ரீதியில் நாம் தொழிற்பட முயல வேண்டும்.

இதற்கு ஒழுங்கான பொருத்தமான கல்வியையே அடி அத்திவாரமாகக் கொண்டு நமது குடும்ப பாசம், தேசப்பற்று, சீலம்மிக்க விழுமியங்கள் ஆகியவற்றின் துணையோடு நம்மை வளர்த்தெடுக்க வேண்டும். புதிய புதிய துறைகளில் நாட்டங் கொள்வதோடு, பழைய பண்பாடுமிக்க விஷயங்களிலும் காலூன்றி நின்றபடி நமது தாழ்வுச் சிக்கல்களைக் களைந்தெறிய வேண்டும். அடிமை மனப்பாங்கை மாற்றி சுதந்திரமாகச் செயலாற்றும் வகையில் சிந்திக்க வேண்டும். இத்தகைய நிலையை நாம் எய்துவதற்கான ஆயத்த நிலைகளே இந்த மகளிர் தின நினைவூட்டல்.

இத்தகைய முக்கியத்துவம் கொண்ட சர்வதேச மகளிர் தினத்தின் இவ்வருட தொனிப் பொருளாக "முன்னேற்றத்தை துரிதப்படுத்தல் (Sharpening the Progress) என்பதாக ஐ.நா. தீர்மானித்திருக்கிறது.

அதாவது நாடுகள் தற்போது பெண்களது முன்னேற்றத்துக்கென எடுத்து வரும் நடவடிக்கைகளை மேலும் துரிதப்படுத்தல் என்பதே அதன் பொருளாகும்.

எமது இலங்கை நாட்டைப் பொறுத்தவரை பொதுவான மக்கள் நிலை அதிலும் குடும்பத்தின் ஆதார சுருதியான பெண்கள் நிலை என நாம் பார்க்குமிடத்து சற்று ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது.

உள்நாட்டுப் போரின் காரணமாக மக்கள் பல்வேறு வகைகளிலும் பாதிக்கப்படுகிறார்கள். அதிலும் குறிப்பாக போர் தீவிரமாக இடம்பெறும் இடங்களில் மேலும் தாக்கங்கள் ஏற்பட்டு மக்கள் இலட்சக்கணக்கில் அகதிகளாக வாழும் நிலை உள்ளது.

பெண்கள் தமது கணவன்மாரை இழந்து செய்வதறியாது தவிக்கும் நிலை உள்ளது. குடும்பங்கள் இந்நிலைமைகளால் சிதறடிக்கப்படுகின்றன.

இருப்பு கேள்விக் குறியாகும்போது முன்னேற்றம் சாத்தியமாவது எப்படி? எனவே அனைத்து முன்னேற்ற நடவடிக்கைகளின் முன்பும் நாட்டில் சமாதானம் தோன்றுவது அவசியமாக இருக்கிறது என்பதைக் கூற வேண்டும். சமாதானமே பெண்களின் சகல முன்னேற்றங்களுக்கும் வழி வகுக்கும் அதற்கான நடவடிக்கைகளே கூர்மைப் படுத்தப்பட வேண்டும்.

திருமதி. பத்மா சோமகாந்தன்
உறுப்பினர்
யா. இ. ம. க – ப. மா. ச – கொழும்பு.

நன்றி — வீரகேசரி சங்கமம் 08-03-2008 பக்கம் 6

பக்கம் 47

வாழ்க்கையை நீங்கள் அனுபவிக்கும் முறை, அதை மாற்றிக் கொள்ளாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் சிதைய விடலாமா?



தேவன் படைத்த உயிர்களில் எல்லாம்
சிறந்து மனிதன் தெரிகின்றான்' - இவன்
சிந்தை வளத்தால் செய்கைத் திறத்தால்
தினமும் புதுமை புரிகின்றான்!

பூவின் இயற்கைப் பொலிவுக் கிணையாய்ப்
புனிதக் கலைகள் வளர்க்கின்றான் - தன்
புத்திச் சிறப்பால் விஞ்ஞா னத்தால்
புதுமை விளைத்துக் களிக்கின்றான்!



இயற்கை வயிற்றைக் கிழித்துக் கொணர்ந்த
இனிமைக ளிங்கே ஏராளம் - இவன்
இறைவன் வியக்கும் வகையில் படைக்கும்
இயல்பால் இந்தப் பாராளும்!

செயற்கைக் கோள்கள் வெளியில் சூழலச்
செய்தான். நிலவில் போய் நின்றான் - பலர்
செய்யும் செயலைக் கம்ப்யூட் டரினால்
சில நொடி யில்செயக் காண்கின்றான்!


மனிதன் நிமிர்ந்தான். மெய்தான்! திமிரால்
வாழ்க்கை நெறியைச் சிதைக்கின்றான் - தன்
மனத்தை ஆளத் தெரியா ததனால்
'மனிதம்' என்பதைப் புதைக்கின்றான்!

'புனிதம்' வெற்றுச் சொல்லாய்ப் போகப்
பூதல மெங்கும் போராட்டம் - இவன்
புத்தியின் ஆக்கம் போர்வெறி யூட்டப்
பொங்கிய தச்சம் பேயாட்டம்!



தெய்வம் படைத்த 'மனிதம்' சிதையும்
செயலை வளர்த்து விடலாமா? - நம்
சிந்தைத் திறமை அழிவுக் குதவும்
சிறுமைப் படுத்தப் படலாமா?

உய்யும் வழியொன் றுள்ளது: மனிதன்
ஒருவன் தானிங் குலகெல்லாம் - நாம்
ஒருவர்க் கொருவர் உறவென் பதனை
உணர்ந்தால் விளையும் நலமெல்லாம்!



திரு. நா. சீ. வரதராஜன்

நன்றி - கல்கி தீபாவளி மலர் 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமுத்திரத்தின் முத்து எனப்படும் சிவபூமியாகிய இலங்கையின், சிறந்த சென்னியாக விளங்குவது யாழ்ப்பாணம் ஆகும். யாழ். மண் தெல்லிப்பழையில், உள்ள மல்லாகம் என்னும் கிராமத்தில், சாதாரண மத்திய தரக்குடும்பத்தில் வாழ்ந்த திரு. அப்பாக்குட்டி திருமதி. தையற்பிள்ளை தம்பதிகளுக்கு சிரேஷ்ட புதல்வியாக, 1925ஆம் அண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதி துர்க்கா துரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அவர்கள் அவதரித்தார்கள்.

# ஸ்ரீதேவி பாரில் அவதரித்தாளோ?

கருவில் திருக் கொண்டது போல் சொற்பொழிவுப் பணி, எழுத்துப்பணி, ஆலய அறங்காவல்பணி, குழந்தைகளுக்கும் முதியோருக்கும் வாழ்வளிக்கும் மக்கள்பணி, என்பவைகளை சிறப்பாக செய்த இவர், எம் மண்ணில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய அன்னை ஆவார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை மல்லாகம் அமெரிக்கன் மிசன் பாடசாலையிலும், விசாலாட்சி வித்தியாலயத்திலும், அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்திலும் கற்றார். சிறுவயதிலேயே கல்வியில் சிறந்து விளங்கினார். (உ-ம்) விளையும் பயிராக முளைத்த இச்சிறுமி தனது 11ஆவது வயதில் 6ஆம் ஜொர்ஜ் மன்னர் முடிசூட்டு விழாக் கொண்டாட்டத்தில் வாழ்த்துப்பா பாடி அனைவரது உள்ளத்தையும் கொள்ளை கொண்டு முதல் பரிசைத் தட்டிச் சென்றார். சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலே இடைநிலைக் கல்வி பயின்று 1940ஆம் ஆண்டில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்திய 'பண்டிதர்' தேர்வில் சித்தி பெற்றார். 1941 முதல் 1944 வரை இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றார்.

இவர் 1946ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித சிசிலியா ஆங்கில பாடசாலையில் தனது ஆசிரியத் தொழிலை ஆரம்பித்தார். அக்காலத்திலேயே முஸ்லிம் பெண்களுக்காகவும், அவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் பெரும் பங்காற்றினார். 1949சில் கொழும்பு பாத்திமா பெண்கள் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்தார். இவ்விரு பாடசாலையிலும் அம்மையாரிடம் கல்வி கற்ற முஸ்லிம் பெண்கள் பலர் இவரின் அரிய முயற்சியினால் ஆசிரியர்களாக, அதிபர்களாக வாழ்ந்ததை அன்னாரின் மணிவிழா மலர் மூலம் அறிந்தோம். சிவத் தமிழ்ச் செல்வியின் ஆரம்ப வாழ்வே மாதர் உயர்வுக்கு மங்களமாய் மாட்சி கண்டது. பின்பு அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்திலும் 1964 முதல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஓய்வு பெறும் வரை ஆசிரியராக பணிபுரிந்துள்ளார்.

இவர் 1957இல் தாயாரை இழந்தார். சென்னை சைவ சித்தாந்த சமாஜம் நடத்திய சைவப் புலவர் பரீட்சையில் 1958இல் சித்தி பெற்றார். 1960இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையையும் இழந்தார். பண்டிதையாகவும் சைவப்புலவராகவும் விளங்கிய சிவத்தமிழ்ச் செல்வி சைவ இலக்கியம், சைவ சித்தாந்தம், சமய ஒழுக்கம் முதலாகப் பல விடயங்களை தேன் தமிழ் பாங்கோடு சிவத்தமிழ் சொல் எடுத்து, சிவநெறி, நன்நெறி அனைத்தும் கூட்டி தெய்வத் தமிழ் பண்பாட்டினை வெண்கல மணிக்குரல் கொண்டு உரக்கப் பாடி வந்த அன்னைத் தமிழ் ஆகிய இவர் சரஸ்வதியின் கடாட்சம் பெற்றவராக எம்முன் திகழ்ந்தார்.

'பளிச்' சென்ற தமிழ்ப் பண்பாட்டின் உருவமாக விளங்கிய இவரின் எளிமையான தமிழாலும், இனிமையான குரலாலும் வசீகரிக்கப்பட்ட ஒவ்வொரு சைவத் தமிழ் வீட்டிலும் 'தங்கம்மா' என்னும் பெயர் இடம் பெற்றது. *1965இல்* தமிழ் நாடு சிதம்பரத்திலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் உரையாற்றினார். 'தங்கம்மா அப்பாக்குட்டியிடம் படிக்கப் போகிறேன்' என்று கூறும் அளவிற்கு அவருடைய சொற்பொழிவுப் பணி அமைந்தது. (உ–ம்) தமிழ் நாட்டிலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அவர் பேசிய பொழுது தலைமை வகித்த பேராசிரியர் சோ.சுப்பிரமணியப்பிள்ளை பின்வருமாறு கூறினார். 'இங்கே பேசியவர் ஈழத்துத் தங்கம், ஈழத்துத் தங்கம் என்றால் மிகுந்த மதிப்புடையது. 22 கரட் பெறுமதியுடையது. நம்பிக்கைக்குரியது. இந்தத் தங்கத்தின் விளக்கத்தை நீங்களும் கண்டீர்கள்'.

இவ்வாறு தமிழகத்திலே அறிமுகம் பெற்ற சிவத்தமிழ்ச் செல்வி மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ் தீவுகள், இலண்டன் ஆகிய நாடுகளில் சொற்பெருக்காற்றி பலருடைய ஆதரவினையும், கௌரவங்களையும் பெற்றுக்கொண்டார். தமிழ் நாட்டில் ஆண்டு தோறும் நடைபெறும் சைவ சித்தாந்த மாநாட்டுக்கு ஈழத்திலிருந்து அறிஞர்களை அழைப்பது வழக்கம் சிவத் தமிழ்ச் செல்வியின் ஆசிரியர் ஸ்ரீ சுந்தரராஜா அய்யங்கார், பண்டிதர் நாகலிங்கம், சேர் கந்தையா வைத்தியநாதன் என்னும் வரிசையில் சிவத் தமிழ்ச் செல்வியின் பெயரும் சேருகின்றது. *1973இல்* தென்னிந்தியாவில் திருவிடை மருதூரில் நடைபெற்ற திருமுறைக் கருத்தரங்குக்குத் தலைமை தாங்கினார். *1980இல்* தமிழ் நாடு ஆரணியில் மங்கையர் மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். நாவலர் பெருமானுக்குப் பின் யாழ் மண்ணிலிருந்து பாரெல்லாம் சமயப் பிரசாரம் செய்த பெருமைக்குரியவர் கலாநிதி தங்கம்மா அம்மையார்.

*1966இல்* மதுரை ஆதீனத்தில் 'செஞ்சொற் செம்மணி' என்ற பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது. *1970இல்* ஈழத்துச் சிதம்பரத்தில் 'சிவத்தமிழ்ச் செல்வி' என்ற பட்டமும் பொன்னாடை பதக்கமும் பெற்றார். *1971ஆம்*, *1972ஆம்*, *1974ஆம்* ஆண்டுகளில் மலேசியா, சிங்கப்பூருக்குச் சொற்பொழிவுப் பயணம் செய்த அவருக்கு அங்கு 'திருவாசகக் கொண்டல்' என்ற பட்டம் கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. சிவத்தமிழ்ச் செல்விக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் கொழும்பில் 'சிவஞான வித்தகர்' என்ற பட்டம் வழங்கி பெருமை தேடிக்கொண்டது. தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானம் 'துர்க்கா துரந்தரி' என்ற பட்டத்தினையும் வழங்கியது. *1991இல்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கலாசூரி' என்ற பட்டத்தை அம்மையாருக்கு அரசு வழங்கியது. யாழ் பல்கலைக்கழகத்தினால் 04-10-1998இல் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. 2005 ஜுலை 15ஆம் திகதி அகில இலங்கை இந்து மாமன்றம் யாழ்மண்ணில் நடத்திய பொன்விழா இந்து மாநாட்டில் 'தெய்வத் திருமகள்' பட்டம் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

'இருபத்தியேழு சொற்பொழிவுகள்', 'பத்துச் சொற்பொழிவுகள்' என எட்டு நூல்களுக்கு இவர் ஆசிரியர் ஆவார். 1978இல் அம்மையாரின் 'கந்த புராண சொற்பொழிவு' நூலுக்கு சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. 1985இல் மணிவிழா நிகழ்வு இடம் பெற்றது. மணிவிழாவையொட்டி 'சிவத்தமிழ் இன்பம்', 'சிவத்தமிழ்ச் செல்வம்', 'சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரை' ஆகிய மூன்று நூல்களும் வெளியீடு செய்யப்பட்டன. 1987இல் இலண்டன் பயணம் செய்து சொற்பொழிவுகள் ஆற்றி 'இலண்டனில் ஏழுவாரம்' நூல் வெளியீடும் இடம் பெற்றது. 2000இல் சிவத்தமிழ்ச் செல்வி அம்மாவின் பவளவிழா மலர் வெளியீடு இடம் பெற்றது. 2001இல் 'பெண்மைக்கும் இணையுண்டோ' நூல் அவரினால் வெளியிடப்பட்டது. மற்றும் 'சைவ கிரியைகள்', 'வாழும் வழி' போன்ற நூல்களுக்கு இவர் ஆசிரியர் ஆவார். சமய இதழ்களிலும் கோயில் மலர்களிலும் பத்திரிகைகளிலும் பெருந் தொகையான கட்டுரைகள் எழுதியுள்ளார்.

சிவத்தமிழ்ச் செல்வி 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகச் சேவிக்கத்தானே' என்று துணிந்தாரோ! அதன் பயனாய் தனது சொற்பெருக்கு வித்துவத்தின் மூலம் கிடைத்த பொருளை பயன்படுத்தி மிகவும் சாதாரண நிலையில் இருந்த தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத்தை புதுப்பித்து, புனருத்தாபனம் செய்து சிறப்புற நிர்வகிக்கும் இறைபணியில் தம்மையும் 1961இல் திருப்பணிச் சபை அங்கத்தவராக இணைத்துக் கொண்டார். 1965இல் மகா கும்பாபிஷேகம் நடந்தது. 1966இல் தேவஸ்தான தனாதிகாரியாகப் பதவி ஏற்றார். ஆசிரியராகவும், சமய பிரசாரகர் ஆகவும் இருந்த அவருடைய செல்வாக்கு தெல்லிப்பழையில் இளைஞரும் முதியோரும் ஒருங்கிணைந்த ஒரு பெரிய தொண்டர் சபை உருவாகக் காலாயிற்று. 1977இல் துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபைத் தலைவர் பதவியை ஏற்றார்.

ஆலய அறங்காவலர் சபையின் தலைவராக பெண்கள் பதவி வகிப்பது மிகவும் அசாதாரணமான காரியம். இத்தகையதோர் பெரும் பொறுப்பை, அறங்காவலர் சபையார் நீண்டகாலம் அம்மையார் தலையில் சுமத்தினர் என்றால் அவர் சிறந்த நிர்வாகி என்பது மட்டுமல்ல, அவர் மீது கவிந்திருந்த ஸ்ரீதுர்க்கா தேவியின் அருட்கருணை என்பதைத் தவிர வேறில்லை.

20.01.1977இல் சித்திரத்தேர் திருப்பணி வேலை ஆரம்பிக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் முதன் முதலாக அம்பாள் சித்திரத்தேரில் பவனி வந்தார். இரண்டாவது மகா கும்பாபிஷேகம் 1981இல் நடந்தது. 1982இல் அம்மையார் 'துர்க்கா புஷ்கரணி' தீர்த்தக்குளப் பிரதிஷ்டையும் செய்வித்தார். இந்த அன்னையினுடைய ஆளுமை ஆலய வளர்ச்சியுடன் சமூக வளர்ச்சியையும் சேர்ப்பதற்கு வழிகாட்டிற்று. அதே ஆண்டில் சைவப் பெண் குழந்தைகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கா புரம் மகளிர் இல்லமும் அமைத்தார். தேவி உறையும் ஆலயம் மக்கள் சேவை செய்யும் நிறுவனமாக எப்படி அமையும் என்பதற்குத் தெல்லிப்பழை தேவஸ்தானமும் அதன் அரவணைப்பிலேயுள்ள துக்காபுர இல்லங்கள் எல்லாம் சான்றுகளாக அமைகின்றன. அவரின் முயற்சியால் துர்க்கா புரம் மகளிர் இல்லம் இரண்டு மாடிக் கட்டடமாக கட்டப்பட்டு 1986இல் திறக்கப்பட்டது. இன்று இவ்வில்லத்தில் நூற்றுக்கு மேற்பட்ட அநாதரவான சிறுமிகள், விவாகமாகாத பெண்கள், விதவைப் பெண்கள் ஆகியோர் பராமரிக்கப்படுகின்றனர். இதற்கு பொருள் வசதிபடைத்த பலர் உதவி வருகின்றனர். இதனால் இவர் மகாலட்சுமியின் அநுக்கிரகமும் கிடைக்கப்பட்டவராக விளங்கினார்.

அம்மையாரின் பிறந்தநாள் அறக்கட்டளை மூலம் வைத்தியசாலைகளுக்கு அன்பளிப்புச் செய்தல், ஏழை மாணவர்களுக்கு உதவுதல், சிறந்த நூல்களை வெளியிடுதல், முதிய அறிஞர்களைப் பாராட்டுதல் போன்ற நற்பணிகளையும் ஆற்றிவந்தார்.

1987இல் போரின் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆலயத்தை நோக்கி ஓடிவந்த வேளை சிவத்தமிழ்ச் செல்வி பரிவுடன் அவர்களுக்கு உணவும் தற்காலிக தங்குமிட வசதிகளும் வழங்கியதை நன்றியுடன் மக்கள் நினைவு கூருகின்றனர். 1992இல் யுத்த அனர்த்தம் காரணமாக மகளிர் இல்ல பிள்ளைகளோடு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் வந்து தங்கினார். 1993இல் தேவஸ்தானத்தில் குண்டு வீச்சு அனர்த்தமும் ஏற்பட்டது. 1995இல் கைதடி சைவச் சிறுவர் இல்லத்திலும் உசன் கந்தசாமி கோயில் வளாகத்திலும் இடம் பெயர்ந்து தங்கியிருக்கும் நிலைமை ஏற்பட்டது. 1996இல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் மீண்டும் வந்து தங்கினார். 1997இல் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மூன்றாவது மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றது. சிவத்தமிழ்ச் செல்வி ஆய்வு நூலகம் உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களால் 2002இல் திறந்து வைக்கப்பட்டது. துர்க்கா துரந்தரியின் அயராத பணிகளின் காரணமாக இவ்வாலயம், ஏனைய பல ஆலயங்களுக்கு முன்னுதாரணமாக விளங்குவதாகப் பெரியோர்கள் பாராட்டி மகிழ்கின்றார்கள்.

சுமார் நான்கு தசாப்தகாலமாக தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தின் மூலமாக தன்னலமற்ற சேவையாற்றிய துர்க்கா துரந்தரி 14.06.2008 துர்க்கா துரந்தரியுடன் இரண்டற கலந்து விட்டார். ஸ்ரீதேவி பாரில் அவதரித்தாளோ? என போற்றும் வண்ணம் நடமாடும் தெய்வமாக வாழ்ந்த அன்னைக்கு நினைவாக துர்க்கையம்மன் வளாகத்தில் அடித்தளத்தில் அமரரின் அஸ்தி வைக்கப்பட்டு நவகோண வடிவில் நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அமரரின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமமான கட்டுப்பிட்டிய மயானத்தில் வைரவர் ஆலயம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இது துர்க்கா துரந்தரிக்கு நாங்கள் செலுத்தும் காணிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Throughout the year Hindus have many festivals and religious observances each month of the Tamil Hindu Calendar. Mostly these festivals are based on Hindu Mythology. There are a few which are nature related.

The Tamil year starts with the New Year on 13th or 14th of April - Chithirai 1st, that is when the sun enters the zodiacal home Aries (Medam) after the Vernal nox. As this day is based on the solar calendar the date remains the same. The Tamil New Year is often referred to as Hindu New Year which is a misnomer. In fact until the advent of Christianity, it remained Tamil New Year. With the Gregorian Calendar coming into force, the Christians celebrated January 1st as the New Year while the Tamil Hindus stuck to April 13th /14th as their New Year. Hence the misunderstanding.

## Hindu festivals, Meanings and Significance

Of course the New Year is received with a religious fervour. In this month of Chithirai (April 13th - May 13th) falls the Chithirai Paurnami - the full moon of Chithirai. This day is observed with poosai (now pooja with a Sanskrit flavour) in memory the of dead mothers. The motherless fast on that day and pray for the souls of the dead mothers to attain Moksha. Some donate money and offer food to the orphanages in memory of their mothers.

In Vaikasi - mid May to mid June is the famous Vaikasi Pongal to Mother Goddess Amman. In all Amman Temples devotees flock carrying pots and pans. This happens during full moon or close upon full moon or a day or two after full moon. In the outer precincts they cook milk rice and the priests cook milk rice in the inner precincts. The cooked milk rice is offered to the deity and then served to the devotees.

In the month of June (Aani) - mid June to mid July the day observed is Aani Utharam. According to mythology, on this day, Lord Natarajah performed a special dance on the request of His ardent devotees. This day therefore is dedicated to Lord Siva and special religious ceremony is performed in Sivan temples.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mid July to mid August is Aadi. This month brings rain. Aadi Peruku means the rivers in spate during this month. The 1st of Aadi - by July 15th is called Aadipirapu - the birth of the month of Aadi. This is celebrated with pomp both in homes and temples. A special sweet thick porridge called 'kool' is prepared with raw rice flour, green gram, sweetened with palmyrah jaggery and served to all.

The new moon of Aadi is kept aside to pray for the dead fathers - fasting and praying for their souls to attain Moksha. On this day too money is donated and food offered to the needy. There is a special day set aside for Mother Goddess. Aadipooram is the star galaxy. On this day Umadevi is said to have attained age - may be in one of her Avathars. The day is spent in fasting and praying.

The fourth day after new moon in Aavani - mid August to mid September is dedicated to God Ganesha. It is called Vinayaga Sathurthi. Interestingly this day was once celebrated as the new year. This is the most important day of all the days observed for Lord Ganesha. On the 15th day after new moon falls Aavani Sathurthasi. This day is dedicated to Lord Natarajah. Associated with the day of Aavanimoolam - a star galaxy - is a story from Periyapuranam.

In Thamil Nadu, there was a saint called Manickavasagar who was the King's prime minister. He was a devoted Saivaite. When the King gave him money to purchase some horses, he spent all that money on some Siva devotees he met on the way and was put in prison. Lord Siva by certain means had him released. That day is the Moolam in Aavani. Every Sunday in Aavani is dedicated to the Sun God.

The month of Purartathi is from mid September to mid October. The Saturdays of this month are for the worship of Saturn. Fasting and praying to Saturn may lessen the hardships or even be beneficial to the people, especially when Saturn is not favourable to them.

Next come the nine nights of Saraswathy pooja. Here too the Festival is linked to mythogy. There was an asura with the head of a bull (Mahisham) called Mahishasuran. He was an embodiment

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of ego. He had got many boons from Brahma. He requested Brahma a boon that he should not come by his death by a male. He was quite sure that no woman would or could fight with him.

As usual he played havoc - harassing devas, sages and men alike. The devas ran to Lord Vishnu to save them. Lord Vishnu referred them to God Siva who called the three Sakthis - Durga, Lakshmi and Saraswathy, " Combine your powers (sakthi) and vanquish the Asura. It is this combined Sakthi who finally vanquished Mahishasuran. She is then known as Mahishasuramarthini. This battle raged for nine days and nine nights. The tenth victorious day is Vijayadasami. As the demon of ignorance was vanquished with a weapon of knowledge on this day, Vijayadasami is held an auspicious day to start the alphabet to children of five years before they start going to school. All arts are taught on this day when they have "Vidya Arambam" starting to learn - learning and knowledge dispel ignorance. It is the ignorant who are always egoistic.

The Kethara Gowry Viratham (fast) starts the day after Vijayadasami. This is to invoke the blessings of Mother Goddess. It lasts one month from one new moon to next. In Puratathi falls the occasion known as Mahalayam. It falls at the end of the new moon. This day is dedicated to all the forefathers. Offerings are made and the poor are fed in memory of the dead ancestors, so their souls may attain Moksha.

Mid October to mid November is the month of Aipasi. It is an auspicious month. The Fridays of this month have special religious significance. Deepavali falls in this month. Year in year out the mythological story is found in black and white in many journals. In short it is the victory of good over evil. The six days after Deepavali are for God Murugan when Murugan devotees observe Kanthasasti. Here too God Murugan fights the demon of ego called Pathmasuran. This mythological story is enacted each year in all Murugan Temples of the world. The next month of Karthigai (mid November to mid December) has a special day on the full moon day called Karthigai Vilakidu. This also has a mythological background.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Once the devas prayed to God Siva who granted them many boons. Drunk with new powers obtained thus, they forgot God Siva. To destroy their ego, God Siva appeared before them in the guise of an old man. He planted a fibre in the sand and asked the devas to pull it out. Try as they might, they could not pull the fibre out. They stared at the old man in awe and amazement. He disappeared and in his place Lord Siva appeared. He admonished them for being so egoistic and said it was due to ignorance. True knowledge only will dispel ignorance as much as light dispels darkness. So this full moon day is observed by lighting oil lamps inside and outside the home to symbolise that the light of knowledge dispels the darkness of ignorance. In the month of Karthigai is also a day dedicated for God Ganesha who vanquished another demon called Gajamukasuran.

The Mondays during this month are for God Siva. It is called Somavaram - week of God Siva.

Mid December to mid January is the month of Margali ( December). This month is supposed to be the dawn to the Gods and devas. Early morning devotees come round the temple and also down the roads singing songs from "Thiruempavai" requesting God Siva to rise. Songs for Lord Vishnu called "Thirupavai" are also sung by devotees in their respective temples.

Mid January to mid February is the month of Thai. The month that ushers in prosperity. This is the 10th month in the Tamil Hindu Calendar. Thaipongal falls on 1st day of Thai - January 14th or 15th. Much has been said about this festival and a repetition is not necessary. The full moon day in Thai is Thaipoosam meant for God Murugan. More then in Sri Lanka this day is celebrated with gusto in Malaysia and Singapore by the Hindus. This year it falls on February 8th. The new moon is also of some significance.

Mid February - mid March is the eleventh month Masi. Maha Sivarathri is celebrated this month. It is an all night worship for God Siva. The star galaxy of Maham - Masimaham is also a day for religious observances.

There are about 28 star galaxies mentioned in the Almanac. Maham, Moolam, Poosam, Utharam are some of them.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Panguni is between mid March - mid April. On Panguni Utharam, Uma took an avathar and was born as the daughter of Parvatharajan, (Parvatham - mountain, Rajan - King). She prayed to God Siva to take her back as His consort. All Mondays of the month are dedicated to Mother Goddess.

Thus the 12 months of the Tamil Hindu Calendar have at least one religious function per month.

During all these days, the family visits the temple to worship and to offer food items. Varieties of sweetmeat called Mothakam, Kolukaddai with fillings of boiled green gram, scraped coconut and jaggery are prepared. These are offered to the Deities in the shrine room in the home or temple and then served to the people.

Thilaka V. Wijeyaratnam

Courtesy Daily News

# கல்லூரியின் சிறந்த மாணவிகள்

2001 செல்வி காயத்திரி சிற்சபேசன்

2002 செல்வி ஜெயப்பிரபா ஜெகதீஸ்வரன்

2003 செல்வி நிலக்ஷி மகாதேவா

2004 செல்வி துளசி கந்தசாமி

2005 செல்வி பாமினி பரஞ்சோதி

2006 செல்வி கபிலினி அரட்செல்வன்

2007 செல்வி கோபிகா குலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# யாழ் இந்து மகளிர் கல்லூரி
# பழைய மாணவிகள் சங்கம் – கொழும்பு
# பதினைந்தாம் ஆண்டு (2008)
# அறிக்கை

## (02-02-08 தொடக்கம் 07-02-2009 வரையும்)

சங்கத்தின் 14வது ஆண்டுப் பொதுக் கூட்டம் 2008ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 02ஆம் திகதி கொழும்பு 4, லொறன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்திலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணர் தலைமையில் நடைபெற்றது.

15வது ஆண்டிற்கான செயற்குழு அங்கத்தவர்களாகப் பின்வருவோர் கடமையாற்றினர்.

| | |
|---|---|
| போஷகர்கள் | – திருமதி உமாராணி குமாரசுவாமி<br>– திருமதி சரஸ்வதி ஜெயராஜா |
| தலைவி: | – திருமதி சிவகாமி அம்பலவாணர் |
| உபதலைவர்கள்: | – செல்வி சற்சொரூபவதி நாதன்<br>– திருமதி அபிராமி கயிலாசபிள்ளை<br>– திருமதி தயாநிதி செல்வநாயகம் |
| பொதுச் செயலாளர்: | – திருமதி கௌரி ரமணா |
| உதவிச் செயலாளர்கள்: | – திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்<br>– திருமதி உஷா சிற்றம்பலநாதன் |
| பொருளாளர்: | – செல்வி சிவமலர் சுப்பிரமணியம் |
| உதவிப் பொருளாளர்: | – செல்வி ஞானலட்சுமி பாலசிங்கம் |
| நிர்வாகக் குழு: | – திருமதி விமலா மணிவாசகன்<br>– திருமதி ருக்மணி அரசரத்தினம்<br>– திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன்<br>– திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திருமதி கமலா கணபதிப்பிள்ளை
- திருமதி கலைச்செல்வி நிரஞ்சன்
- திருமதி நந்தினி மோகன்
- திருமதி கமலா கனகசபை
- திருமதி மல்லிகாதேவி சரவணபவான்
- திருமதி இந்திராணி சோமசுந்தரம்
- திருமதி கௌரி தேவசேனாதிபதி
- திருமதி திலகா விஜயரத்தினம்
- திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம்
- திருமதி கமலருளேஸ்வரி சர்வானந்தா
- திருமதி மஞ்சுளா ஜீவலிங்கம்
- செல்வி வத்சலா நாகலிங்கம்
- திருமதி தயாநிதி உதயகுமார்
- திருமதி பொன்மலர் கந்தசாமி
- திருமதி சாரதாம்பாள் மனோகரன்
- திருமதி மகேஸ்வரி கணேசமூர்த்தி
- திருமதி புஷ்பகாந்தி சோதிலிங்கம்
- திருமதி சாவித்திரி உமாமகேஸ்வரன்

5. கணக்குப் பரிசோதகர்: கணேஷலிங்கம் அன்ட் கொம்பனி, சார்ட்டட் அக்கவுண்டன்ஸ், 16 B Schofield Place, கொழும்பு 3.

6. யாழ் நாதம் ஆசிரியை: திருமதி விமலா மணிவாசகன்

இவ் வருடத்தில் நடத்திய முக்கிய நிகழ்வுகள்

1. சர்வதேச மகளிர் தின விழாவில் எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜா கௌரவிக்கப் பட்டார். அன்றைய தினம் யாழ் நாதம் இதழ் 14 வெளியிடப்பட்டது. (விபரங்கள் பக்கங்கள் 5 தொடக்கம் 26 வரையும் உள்ளது.)

2. இலவச மருத்துவ சட்ட முகாம் லயன் சங்கத்தின் ஆதரவுடன் நடைபெற்றது. அத்துடன் மலிவு விற்பனையும் நடைபெற்றது.

3. எங்கள் கல்லூரியின் 2007ம் ஆண்டுச் சிறந்த மாணவியான செல்வி கோபிகா குலசிங்கத்திற்கு ரூபா 22,000/- பெறுமதியான பொன்விருது வழங்கப்பட்டது. (படம் பின் அட்டை)

4. எங்கள் கல்லூரி மாணவிகள தமிழ்த்தினப் போட்டிக்காக கொழும்பிற்கு வருகை தந்த போது மதிய போசன விருந்து கொடுக்கப்பட்டது. (விபரங்கள் 46ம் பக்கத்தில் உள்ளது).

5. இவ்வருடத்திற்கான ஒன்றுகூடல் நிகழ்வு 2008ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 28ம் திகதி கொள்ளுப்பிட்டி ராஜபோஜன் உணவகத்தில் நடைபெற்றது. (படங்கள் பின் அட்டை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சென்ற வருடம் எங்கள் சங்கம் அன்பளிப்புச் செய்த மேடைத்திரைச்சீலைக்கு தேவைப்பட்ட மிகுதித் தையல் கூலி ரூபா 98,777/- வழங்கப்பட்டது.

7. எங்கள் சங்கம் ஸ்தாபித்த www.jhlc.lk எனற இணையத்தளம் தொடர்ந்து நிர்வகிக்கப்படுகிறது.

8. யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு உதவி

9. யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளுக்கு உதவி

சங்கத்தின் நடப்பு ஆண்டில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டங்கள்

| திகதி | இடம் | வரவு |
|---|---|---|
| 01/03/08 | சரஸ்வதி மண்டபம், 75, லொரன்ஸ் வீதி, கொழும்பு 4 | 12 |
| 05/04/08 | சரஸ்வதி மண்டபம், 75, லொரன்ஸ் வீதி, கொழும்பு 4 | 11 |
| 03/05/08 | சரஸ்வதி மண்டபம், 75, லொரன்ஸ் வீதி, கொழும்பு 4 | 8 |
| 07/06/08 | சரஸ்வதி மண்டபம், 75, லொரன்ஸ் வீதி, கொழும்பு 4 | 9 |
| 09/08/08 | சரஸ்வதி மண்டபம், 75, லொரன்ஸ் வீதி, கொழும்பு 4 | 13 |
| 06/09/08 | சரஸ்வதி மண்டபம், 75, லொரன்ஸ் வீதி, கொழும்பு 4 | 8 |
| 06/12/08 | சரஸ்வதி மண்டபம், 75, லொரன்ஸ் வீதி, கொழும்பு 4 | 10 |
| 03/01/09 | சரஸ்வதி மண்டபம், 75, லொரன்ஸ் வீதி, கொழும்பு 4 | 8 |

இலவச மருத்துவ சட்ட முகாமும் மலிவு விற்பனையும்:
2008ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 10ம் திகதி லயன் கழகத்துடன் இணைந்து மருத்துவ சட்ட முகாம் நடாத்தப்பட்டது. இம் முகாமில் 250திற்கும் மேற்பட்டோர் நன்மை பெற்றனர். இதில் லயன் கழகம் 306 B1, 306 B2 இலுள்ள வைத்தியர்களும் எமது பாடசாலை பழைய மாணவிகளான வைத்தியர்களும் இணைந்து செயற்பட்டனர். இதில் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கியதுடன் மருத்துவப் பரிசோதனைகளும் நடாத்தப்பட்டு இலவச அறிவுரைகளும் வழங்கப்பட்டது. இதனுடன் இலவச சித்த வைத்திய சேவையும் இலவச சட்ட ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. மலிவு விற்பனையும் நடைபெற்றது. இதற்கு மேசை ஒன்றுக்கு ரூபா 1,000/- மும் கொடி (banner) ஒன்றுக்கு ரூபா 2,500/- ம் அறவிடப்பட்டது.

இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலக்க இருந்த லயன் கழக முன்னாள் மாவட்ட ஆளுநர் லயன் எஸ் ராகவன் தவிர்க்க முடியாத காரணத்தினால் கலந்து கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. எனினும் லயன் Dr. எஸ். எஸ் அருளானந்தம், லயன் Dr. F. A. ரா ஜகுலேந்திரன், சட்டத்தரணி திரு சிவானந்தன். லயன் எம். மகேந்திரன், லயன் ரசீதா, லயன் ராஜசேகர். லயன் ராஜேஸ்வரி ரவிகுலராஜன் என்போர் கலந்து சிறப்பித்தார்கள். சித்தவைத்தியர் டாக்டர் திருமதி விக்கினேஸ்வரி செல்வநாதன், சட்டத்தரணி திருமதி சுகந்தி ராஜகுலேந்திரன், எமது பழைய மாணவிகளான வைத்தியக் கலாநிதிகள் திருமதி நந்தினி மோகன், திருமதி சாந்தினி வரதராஜன். சசிகலாவின் கணவரான பொது வைத்திய நிபுணர் திரு சுரேஸ் என்பவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். மலிவு விற்பனையும் இடம்பெற்றது. (படங்கள் பின் உள்அட்டை)

யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு உதவி:

2008ஆம் ஆண்டிற்கான உதவிப்பணமாகிய ரூபா 500/- மாதம் தோறும் பெற்றவர்கள் பெயர்கள் பின்வருமாறு:

செல்வி பிரவீனா பரமேஸ்வரன் 10 பி
செல்வி மயூரதி குகனேஸ்வரன் 9 ஈ
செல்வி தீபிகா ஸ்ரீஸ்கந்தராஜா 10 எவ்
செல்வி யுவரேகா துஸ்யந்தன் 7 ஈ
செல்வி வஜிதா தவராசா 11 சி
செல்வி பவித்திரா விக்ரர் விஜயநாதன் 7 எவ்

கல்லூரி அதிபர் திருமதி வேதநாயகி பேரின்பநாதன் சென்ற ஆண்டுகளில் செய்தது போன்று 2008ஆம் ஆண்டும் ஒவ்வொரு மாதமும் இந்த மாணவிகள் உதவிப் பணம் பெற்றதற்கு அத்தாட்சியாக மாணவிகள் கையொப்பத்துடன் ஒரு கடிதம் எங்கள் சங்கத்திற்கு அனுப்பியது அவரது கடமை உணர்வை எடுத்துக் காட்டுகின்றது. மேலும் அதிபர், சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணரின் வேண்டுகோளுக்கு இணங்க மேலதிகமாக தரம் 6ல் கல்வி கற்கும் 4 மாணவர்களைத் தெரிவு செய்து ஐப்பசி (ஒக்டோபர்) மாதம் தொடக்கம் உதவிப் பணம் வழங்கி வருகிறார். மேலதிகமாகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவிகளின் விபரங்கள் பின்வருமாறு:

செல்வி வான்மதி நாகலிங்கம் 6 பி
செல்வி பிரசாந்தி மதியரசு 6 டி
செல்வி பவானி குகதாசன் 6 சி
செல்வி தர்சிகா பாலேந்திரன் 6 ஈ

யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளுக்கு உதவி

ஆரம்பப் பாடசாலை மாணவிகளின் வயதைக் கருத்தில் கொண்டு அதிபர் திருமதி T A. துரைசிங்கம் மூன்று மாணவிகளுக்கு ஹற்றன் நஷனல் வங்கியில் கணக்குத் திறந்து ஆளுக்கு ரூபா 4,000/- 2008ம் ஆண்டிற்கான உதவிப் பணமாக வைப்புச் செய்துள்ளார். அவர்கள் பெயர்கள் பின்வருமாறு:

செல்வி சுஜேனுகா சுரேஸ் 1B
செல்வி. லாவண்யா சிறீஸ்கந்தராஜா 4C
செல்வி மயூரி பாக்கியராஜ் 1C

இதை உறுதிப்படுத்தி மாணவிகளின் கையொப்பத்துடன் 2008.12.04 திகதி இடப்பட்ட கடிதம் ஒன்றும் எங்கள் சங்கத்திந்கு அனுப்பி உள்ளார்.

எங்கள் சங்கம் வடகீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனத்தில் (வ. கீ. பி. பா. ப. மா. சம்) ஒரு அங்கத்துவ சங்கமாக தொடர்ந்து இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் சங்கத்தை இந்த ஆண்டு (2008) பின்வருவோர் பிரதிநிதித்துவப் படுத்தினார்கள்:

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை, திருமதி சிவகாமி அம்பலவாணர், செல்வி சற்சொரூபவதி நாதன், திருமதி விமலா மணிவாசகன், செல்வி சிவமலர் சுப்பிரமணியம்

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை சம்மேளனத்தின் பொருளாளராகவும் திருமதி சிவகாமி அம்பலவாணர் இணைச் செயலாளராகவும் செல்வி சற்சொரூபவதி நாதன் எங்கள் கல்லூரிப் பிரதிநிதியாகவும் கடமையாற்றினார்கள்.

எமது சங்கக் கூட்டங்களையும் ஏனைய நிகழ்வுகளையும் நடத்துவதற்கு இலவசமாக சரஸ்வதி மண்டபத்தைத் தந்துதவும் இந்து வித்தியா விருத்திச் சபைக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

எங்கள் சங்கக் கணக்குகளை இலவசமாக பரிசோதனை செய்து தரும் திரு. சச்சிதானந்தனுக்கும், இதை ஒழுங்கு செய்த திருமதி. பரமேஸ்வரி சச்சிதானந்தனுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.
சங்க அலுவல்களில் எனக்கு உறுதுணையாக இருந்த எய்கள் சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணருக்கும், உப தலைவிகளுக்கும், பொருளாளர் சிவமலர் சுப்பிரமணியத்துக்கும், நிர்வாகக்குழு அங்கத்தவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எங்கள் சங்கமும் கல்லூரியும் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் முன்னேற கல்லூரி வளாகத்திலுள்ள நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் அருள்பாலிப்பாராக.

*திருமதி கௌரி ரமணா*
*கௌரவ செயலாளர்*
*07.02.2009*

சர்வதேச மகளிர் தின விழாவில் மேடையில் அமர்ந்திருப்போரின் படம் முன் அட்டையில் உள்ளது.

எங்கள் சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர் திருமதி கமலா கனகசபை 2009-02-11 அன்று காலமானார். அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம். இவர் எங்கள் சங்க செயற்பாடுகள் எல்லாவற்றிலும் தமது வயதையும் பொருட்படுத்தாது ஆர்வமுடன் கலந்துகொள்பவர். என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவரின் பிரிவால் துயருறும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியபோசன விருந்து (குறிப்பு - பக்கம் 46)





2008.08.10 அன்று லயன் கழகத்துடன் இணைந்து இலவச மருத்துவ சட்ட
முகாம், மலிவு விற்பனை நிகழ்வுகளின் நிழல்கள் (குறிப்பு - பக்கம் 62)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2007ஆம் ஆண்டுச் சிறந்த மாணவி செல்வி கோபிகா குலசிங்கம் பிரதம விருந்தினர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகத்திடம் இருந்து பொன் விருதைப் பெறுகின்றார்

(குறிப்பு – பக்கம் 61)



கலாபூஷண விருது

(குறிப்பு – பக்கம் 19)

2008.12.28 அன்று நடைபெற்ற ஒன்றுகூடல் நிகழ்வின் நிழல்கள்

(குறிப்பு – பக்கம் 61)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINTED BY UNIE ARTS (PVT) LTD, COLOMBO 13. TEL: 2330195